padippakam

# அண்ணா 100

## அபூர்வ அனுபவங்கள்



படிப்பகம்

தொகுப்பு : சபீதா ஜோசப்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# அண்ணா 100



சபீதா ஜோசப்

படிப்பகம்

padippakam

அண்ணா 100

□

சபீதாஜோசப்

□

முதல் பதிப்பு : 2006
இரண்டாம் பதிப்பு : 2007
மூன்றாம் பதிப்பு : 2009
நான்காம் பதிப்பு : 2010
நூலின் அளவு : 14 x 21.5 டெம்மி
பக்கங்கள் : 128
விலை : **90/-** (ரூபாய் தொண்ணூறு மட்டும்)

□

வெளியீடு :
**நக்கீரன் பப்ளிகேஷன்ஸ்,**
**105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை,**
**சென்னை - 600 014. தொலைபேசி : 43993029**

□

அட்டை மற்றும் வடிவமைப்பு : த.சரவணப்பெருமாள்
அட்டை மற்றும் உள் அச்சாக்கம் : சாருபிரபா பிரிண்டர்ஸ், சென்னை-600 014.
கட்டமைப்பு : ஆர்.எஸ். பைண்டிங் ஒர்க்ஸ், சென்னை-600 005.

**ANNA 100**

□

**Sabitha Joseph**

□

First Edition : **2006**
Second Edition : **2007**
Third Edition : **2009**
Fourth Edition : **2010**
Book Size : **14 X 21.5 Demmy**
Pages : **128**
Price : **Rs. 90/- (Ninty Rupees Only)**

□

Published by :
**Nakkheeran Prabha Publications,**
**105, Jani Jahan khan Road, Royapettah,**
**Chennai-600014. Phone : 43993029**

□

Cover and Designed by : **D.Saravanaperumal**
Cover and Inner printed by : **Saaru Prabha Printers, Chennai-600 014.**
Binding by : **R.S. Binding Works, Chennai-600 005.**



படிப்பகம்

padippakam



# பதிப்புரை

***1962*** தேர்தல் வந்தது, காஞ்சிபுரத்தில் அண்ணா தோற்றார். அவர் தோல்வியை எப்படிக் கருதினார் என்பதை அவரே பச்சையப்பன் கல்லூரியில் பேசும்போது விளக்கினார்.

'புனித ஜெருசலத்திற்காக ஐரோப்பிய நாடுகள் போரிட்டன. ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது. 'ஐரோப்பியப் படைக்குத் தலைமை வகித்த ரிச்சர்டு மன்னன் உள்ளே வரக்கூடாது, மற்றவர்கள் வரலாம்' என்பதே அந்த நிபந்தனை. இதைக் கேட்ட அந்த மன்னன்,

'நான் உள்ளே போகாவிட்டால் என்ன? என் படைகள் உள்ளே போகிறது' என்றான். அதுபோல் சட்டசபையில் என்னை நுழையவிடவில்லை. அதனால் என்ன? என் தம்பிமார்கள் ஐம்பது பேர் உருவில் நான் செல்கிறேன்' என்றார்.

எதையும் மனநிறைவுடன் ஏற்றுக்கொள்ளும் பக்குவம்மிக்க தலைவர் அண்ணா என்பதற்கு இது ஒரு சாட்சி.

**- பதிப்பகத்தார்**

படிப்பகம்

# முன்னுரை

எழுத்தாளராகும் கனவுகளோடு ஐந்து ரூபாயுடன் 1982-ல் சென்னைக்கு வந்தவன் நான். அதன்பின் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்போல பல வேலைகள் பார்த்துவிட்டு பத்திரிகையாளன் ஆனேன்.

கடந்த 1989-ல் தொடங்கியது எனது எழுத்துப்பணி. 'மின்மினி'யில் ஓராண்டு. 'வண்ணத்திரை'யில் நான்காண்டு. 'குமுதம்' (ஒப்பந்த அடிப்படையில்) நான்காண்டு, 'குங்குமம்', 'முத்தாரம்'. 'பேசும்படம்', 'குங்குமச்சிமிழ்', 'சினிக்கூத்து', 'கல்கி', 'திரைச் சிற்பி', 'ரஜினி' என பல முன்னணி பத்திரிகைகளில் சுதந்திரமான பத்திரிகையாள னாக எழுத்து பயணம் தொடர்ந்தது. கடந்த பிப்ரவரி 2006 முதல் 'டி-சினிமா'வின் பொறுப்பாசிரியர் பணி.

இத்தனை வருட சினிமா பத்திரிகை அனுபவத்தில் நான் பார்த்த பேசிய, பழகிய கேள்விப்பட்ட விஷயங்கள் புத்தகமாக இறக்கி வைக்க ஒரு வாய்ப்புக்காக காத்திருந்தேன்.

பத்திரிகையுலக ஜேம்ஸ் பாண்டு அண்ணன் நக்கீரன்கோபால் அவர்களை டி.சினிமாவுக்காக சந்தித்தபோது, பக்கத்து இலைக்குப் பாயசமாய் அவரது பதிப்பகத்தில் எழுத வாய்ப்பு கேட்டேன்.

"என்னென்ன புத்தகம் எழுதி வெச்சிருக்கீங்க சொல்லுங்க" என்றார். பெரியார் 100, காமராஜர் 100, அண்ணா 100, கலைஞர் 100, எம்.ஜி.ஆர். 100, சிவாஜி 100, ரஜினி 100, கமல் 100 என்று பட்டியலிட்டு இதில் எது சொன்னாலும் எழுதிவிடுகிறேன்" என்றேன்.

"அந்தப் பட்டியல்ல கலைவாணர் 100, கண்ணதாசன் 100 என பத்து புத்தகமாக எழுதி கொடுங்க என்று இன்ப அதிர்ச்சி கொடுத்தார். உடனே அட்வான்ஸாக ஒரு காசோலையும் கொடுத்து தொடர் இன்ப அதிர்ச்சி கொடுத்தார். அவரது மனிதநேயத்தைக் கேள்விபட்டிருந்தேன். இன்று கண்முன் காண்கிறேன்.

இப்படிப்பட்ட நல்ல இதயம் எல்லா நலமும், எல்லா வளமும் பெற்று வாழ வேண்டும் என இறைவனிடம் கோரிக்கை வைத்தேன்.

நல்ல வாய்ப்பளித்த அண்ணன் நக்கீரன் கோபால் அவர்களுக்கு 101, 102 குறள்படி நன்றியை உரிதாக்குகிறேன்.

**-சபீதாஜோசப்**

padippakam





# அறிஞர் அண்ணா 100

சபீதா ஜோசப்

படிப்பகம்

padippakam





- 1 -

# 100-க்கு 100 வாங்கிய அண்ணா

**அ**ண்ணா முதலில் கல்வி கற்கச் சேர்ந்ததும் பச்சையப்பன் ஆரம்பப் பாடசாலை, அவர் பட்டம் பெற்றதும் பச்சையப்பன் கல்லூரிதான்.

ஆரம்பப் பாடசாலையில் அவரைச் சேர்க்கும் போது அவருக்குச் சடை பின்னிப் பூச்சூட்டித்தான் அனுப்புவார்கள்.

அவரைப் பெண் போலவே பாவித்து, தலை சீவுவது மட்டுமல்ல, அவரை அழைக்கும் போது கூட, 'வாடா, போடா' என்று கூறாமல், 'வாம்மா, போம்மா' என்றே வீட்டிலுள்ளோர் அழைப்பார்கள்.

பள்ளிக்கூடத்துப் பையன்கள் எல்லாம் கிராப்புத் தலையோடு இருக்கத் தான் மட்டும் 'சடை பின்னிக் கொண்டு இருப்பதையும் கண்டு அண்ணாவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. பள்ளிக்கூடம் விட்டு அவர் வரும்போது அவரை அழைத்துச் செல்ல வந்த தொத்தாவிடம் இதைச் சொல்ல நினைத்தார் அண்ணா.

'தொத்தா எத்தனை மார்க் வாங்கியிருக்கேன் பாரு' என்று சிலேட்டை நீட்டினார் அண்ணா.

'நீயே சொல்லு, எத்தனை மார்க்கு, கண்ணு?' என்றார் தொத்தா -'நூற்றுக்கு நூறு' என்றார் அண்ணா பெருமையாக. "அப்படியா! என் ராஜா எல்லாத் திலேயும் கெட்டிக்காரன், என்று முத்தம் கொடுத்துப் பாராட்டினார். இதுதான் சமயம் என்று, 'தொத்தா' அந்தப் பசங்களைப் பாரு. எல்லாரும் கிராப் வைச்சுக்கிட்டு இருக்காங்க. எனக்கு மட்டும் இதுவா?' என்று சடையை இழுத்துக் காட்டினார் அண்ணா.

ஒரு நிமிடம் திகைத்துப் பிறகு பரவசமடைந்த தொத்தா, 'கண்ணு. நாளைக்கே உனக்கு கிராப் வெட்டிவிடச் சொல்றேன்' என்று கூறிவிட்டு, 'சின்ன வயசாயிருந்தாலும் என் துரை எவ்வளவு பக்குவமாகத் தனது கஷ்டத்தைச் சொல்கிறான்' என்று பூரித்துப் போனார்.



படிப்பகம்

padippakam





- 2 -

## மொழி பெயர்ப்பாளர்

திருச்சி கி.ஆ.பெ.விசுவநாதம் ஓர் இந்தி எதிர்ப்பு மாநாட்டை தொடக்க காலத்தில் மிகப் பிரம்மாண்டமான முறையில் நடத்தினார்.

அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வந்த தலைவர்கள் எல்லாரும் ஆங்கிலத்திலேயே பேசு ார்கள். அவர்களுடைய ஆங்கிலப் பேச்சை மொழி பெயர்க்கக் குறித்த நேரத்தில் மொழி பெயர்ப்பாளர் வந்து சேரவில்லை, பதறிப் போனார் கி.ஆ.பெ.

ஒரு வழக்கறிஞரை அணுகி 'மொழி பெயர்க்கிறீர்களா?' என்று கேட்டார். 'ஐயா... இவர்கள் பேச்சையா? நம்மால் முடியாது' என்று கைவிரித்து விட்டார். ஒன்றும் புரியாமல் கி.ஆ.பெ. திகைத்தார்.

அப்போது கூட்டத்திலிருந்த சிலர், 'இதோ,



படிப்பகம்

padippakam



இங்கொரு இளைஞர் இருக்கிறார். நன்றாக மொழி பெயர்ப்பார்' என்றார்கள்.

'புதிதாக ஆட்களை விட்டால் என்ன ஆகுமோ?' என்று பயந்தார் கி.ஆ.பெ. தலைவர்களோ 'எங்கே மொழி பெயர்ப்பாளர்? எங்கே மொழி பெயர்ப்பாளர்?' என்று கேட்டனர்.

அப்போது கி.ஆ.பெ. அந்த இளைஞனை அழைத்து, 'நன்கு மொழிபெயர்ப்பீரா?' என்று கேட்டார்.

'ஏதோ கொஞ்சம் தெரியும்' என்றார் அந்த இளைஞர் அடக்கமாக.

'அடக்கம் இருந்தால் விஷயம் இருக்கும்' என்பதைப் புரிந்துகொண்ட கி.ஆ.பெ. அந்த இளைஞரை மொழி பெயர்க்க அனுப்பினார். தலைவர்களின் பேச்சு ஆங்கில மொழியின் வெள்ளமாக இருந்தது. மொழி பெயர்ப்பாளரின் தமிழோ தேன் மழையாக இருந்தது. பூரித்துப் போனார் கி.ஆ.பெ.

மொழி பெயர்ப்பாளர் மேடையை விட்டு கீழிறங்கி வந்தார். கி.ஆ.பெ. விசுவநாதத்தைப் பார்த்து 'எப்படி மொழிபெயர்ப்பு?' என்று குறும்பாகக் கேட்டார்.

'நன்றாக இருந்தது. கொஞ்சம் பொடியும் கலந்திருந்தது' என்று கூறிப் பாராட்டினார் முத்தமிழ்க் காவலர் விசுவநாதம்.

அவரிடம் பாராட்டைப் பெற்ற அந்த இளைஞர், அறிஞர் அண்ணா அவர்கள்தான்.



படிப்பகம்

padippakam



## - 3 -

# அண்ணாவின் தாயுள்ளம்

**ரா**ஜாஜி கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்று தமிழகம் வந்தபோது அவருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கறுப்புக்கொடி காட்டப்பட்டது.

அப்போது என்னை (கே.டி.எஸ்.மணி) தலைமையாகக் கொண்ட அணியில் சென்னை டி.கே.கபாலி, காஞ்சி பரமசிவம் உட்பட 26 பேர், ராஜாஜிக்கு கறுப்புக் கொடி காட்டி கைதானோம். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி முதன் முதலாக காங்கிரஸ் ஆட்சியாளரால் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்ட முதல் அணியே அதுதான்.

முதல் முதலாகச் சிறைக்குப் போகும் அணி என்பதால், அறிஞர் அண்ணா அவர்களே ஓடோடி சென்று 26 பிரியாணிப் பொட்டலம் வாங்கி வந்து சிறை அதிகாரியிடம் பத்து நிமிடம் அனுமதி பெற்று, அவரே பிரியாணிப் பொட்டலங்களைப் பிரித்துக் கொடுத்து உண்ணச் செய்து, பிறகு தழுதழுத்த குரலில்,

''மணி... இவர்கள் யாரும் சிறை சென்ற முன்அனுபவம் இல்லாதவர்கள். நீ தான் இவர்களுக்குத் தலைமை வகித்து அழைத்துப் போக வேண்டும். சிறைக்குள் எல்லாக் காரியங்களையும் செய்து தரவேண்டும்'' என்று கூறி சிறைக்கு வழி அனுப்பி வைத்தார்.

இப்படி அண்ணாவின் தாயுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார் காஞ்சிபுரம் கே.டி.எஸ்.மணி.



padippakam





## - 4 -

## நாடகப் பிரியர்

**அ**ண்ணா ஈரோட்டில் இருக்கும்போது அடிக்கடி நாடகம் பார்க்கப் போய்விடுவார். நாடகம் சினிமா என்றால் பெரியாருக்குப் பிடிக்காது.

அதிலும் அண்ணாவுக்குத் தெருக்கூத்தில் அலாதியான ப்ரியம். பெரியாருக்கோ அது கொஞ்சம் கூடப் பிடிக்காது.

ஒருமுறை ஈரோட்டில் வளையக்காரத் தெருவில் தெருக்கூத்து நடந்தது. அண்ணா அதைப் பார்க்கப் போய்விட்டார்.

பெரியாரும் அண்ணாவைத் தேடிக் கொண்டு வந்து விட்டார்.

'என்னங்க தெருக்கூத்தில் வந்து உட்கார்ந்து கொண்டீங்க!' என்று கேட்டுக்கொண்டே பெரியார் அவர்கள் அண்ணாவின் அருகில் அமர்ந்து கொண்டார். பெரியாருக்குத் தெருக்கூத்தை விளக்கி அண்ணா கூறினார்.

தெருக்கூத்தை அதற்குமுன் வெறுத்த பெரியார் அதை ரசிக்கத் தொடங்கி விட்டார். தெருக்கூத்தின் முடிவில் பெரியார், 'அண்ணாதுரை! இதிலேயும் விஷயம் இருக்குதய்யா' என்று கூறிப் பாராட்டினாராம்.



படிப்பகம்







padippakam





- 5 -

# அண்ணாவின் சமாளிப்புகள்

**நா**டகத்தில் ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால் அதைச் சமாளிப்பதில் அண்ணாவுக்கு நிகர் அண்ணாதான்.

வீர சிவாஜியின் குருவாக அண்ணா நடித்துக் கொண்டிருந்தார். அவருடைய சீடருடன், கண்ணனின் கோபிகாஸ்திரீ'களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்.

அப்போது சீடர் கோபிகாஸ்திரீ என்று சொல்வதற்குப் பதில் 'சீதை' என்று கூறி விட்டவர்.

உடனே அண்ணா சமாளித்துக்கொண்டு 'ஏண்டா மண்டூ! அபச்சாரமாப் பேசாதே' என்று கூறிச் சமாளித்தார்.

அதே நாடகத்தில் அந்தச் சீடர் செய்த தவறால் அண்ணா வாய் தவறி, 'எக்ஸ்ட்ரா' என்று ஓர் ஆங்கில வார்த்தையைப் பயன்படுத்தி விட்டார்.

நாடகத்தைப் பார்க்க வந்தவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. உடனே அண்ணா சமாளித்துக் கொண்டு, 'என்னடா மண்டூ! குரு தேவர் பரங்கியர் பாஷை பேசறார்ன்னு பார்க்கிறீயா? இப்போது வியாபாரத்துக்குப் பரங்கியர் வந்திருக்கிறார்கள். அவர்களுடன் பழகி அவர்கள் பாஷையைக் கத்துக்கிட்டு இருக்கேன்' என்றாரே பார்க்கலாம்.

சிவாஜியின் காலத்தில் ஆங்கிலேயர் வியாபாரிகளாக வரத் தொடங்கினர் என்ற சரித்திர உண்மையைப் பயன்படுத்தி அந்த இக்கட்டான சமயத்தில் அண்ணா சமாளித்தார்.

சமாளிப்புக் கலையில்கூட ஒரு நாகரிகத்தை, ஒரு புது விஷயத்தை வெளிப்படுத்தியிருப்பார் அண்ணா. அதுதான் அறிஞர் அண்ணா.



படிப்பகம்



- 6 -

# அண்ணாவின் நடிப்பு

**நா**டகத்தில் அண்ணா காட்டிய நடிப்பாற்றலின் உச்சியைத் தலைசிறந்த நடிகர்களே பாராட்டியிருக்கின்றனர்.

ஒரு பெரிய ஜமீன்தாராக அண்ணா நடித்தார். ஜமீன்தார்களுக்குள்ள முதலாளித்துவ சோம்பேறித்தனத்தை அழகாகச் சித்தரித்திருந்தார்.

ஜமீன்தார் சோபாவில் (அண்ணா) அமர்ந்திருப்பார்.

உடனே அவசரமாகக் குரல் கொடுத்தார். மாடிப்படியிலிருந்து வேலையாள் ஓடோடி வருவான்.

'ஐயா! கூப்பிட்டீங்களா?'

'ஆமா. என் காலை எடுத்து 'ஸ்டூல் மேலே வை!' என்றார்.

ஜமீன்தார்களின் சோம்பேறித்தனத்தை இப்படி ஒரு சிறிய நிகழ்ச்சி மூலம் அண்ணா அழகாக விளக்கியிருந்தார்.

நடிப்புக் கலையிலும் சிறந்து விளங்கினார் அண்ணா.

அண்ணா 100



padippakam





## - 7 -

# தன்னம்பிக்கை

தி.மு.கழகத் தொடக்கக் கூட்டத்தில் பேசியவர்கள், 'பெரியாருக்கு மட்டுமல்ல திராவிடர் கழகம் சொந்தம். நமது உழைப்பால் உருவானது. அதனுடைய சொத்தில் நமக்கும் பங்கு உண்டு. ஆகவே, வழக்குப் போட்டு அந்தச் சொத்துக்களை அடைவோம்' என்று கூறினார்கள்.

ஆனால், அண்ணா அவர்கள் எழுந்து, 'நமது திறமையில்-உழைப்பில் நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வந்தோம். உன்னதமான இயக்கத்தைப் படைத்தோம் என்ற சரித்திரம் உருவாக்குவோம்' என்றார்.

தன்னம்பிக்கையின் உருவமாக அண்ணா திகழ்ந்ததைக் கண்டு அனைவர் உள்ளத்திலும் அந்தத் தன்னம்பிக்கை தோன்றத் தொடங்கியது. அந்தத் தன்னம்பிக்கைதான் குறுகிய காலத்தில் தமிழகம் அவர் ஆளுகைக்கு வரக் காரணமாக அமைந்தது.



படிப்பகம்

padippakam





- 8 -

## தலைவர்தான் பேசுவார்

**பெ**ரியாருடன் அண்ணா பணியாற்றியபோது வடநாட்டுப் பயணம் மேற்கொண்டார். அப்போது பெரியார் பல இடங்களில் சொற்பொழிவு செய்தார்.

பெரியாரின் தமிழ்ச் சொற்பொழிவை ஆங்கில மொழியில் மொழி பெயர்ப்பதே அங்கு அண்ணாவின் பணி.

வடநாட்டில் இவரது ஆங்கில மொழி அறிவைக் கண்டு வியந்தவர்கள், அண்ணாவைத் தனிச் சொற்பொழிவு ஆற்றும்படி அழைத்தனர்.

'தலைவர் இருக்க நான் தனியே சொற்பொழிவாற்ற வரமாட்டேன்' என்று மறுத்துவிட்டார் அண்ணா.

அண்ணாவின் ஆங்கிலம் அவர்களை மயக்கியது. ஆனால் அவர்களின் புகழ்ச்சி அண்ணாவை மயக்கவில்லை. அதனால்தான் தலைவரை மீறிச் செல்லக்கூடாது என்ற பண்பை வெளிப்படுத்தினார்.




படிப்பகம்

padippakam





## - 9 -

## பெரியார் சுவாமிகள்

ஒரு சமயம் பெரியாருடன் அண்ணா வடநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பத்து நாட்கள் ஹரித்துவாரில் தங்கி இருந்தார்கள். காலஞ்சென்ற பேரறிஞர் எம்.என்.ராய். இல்லத்தில் தங்கி பெரியார் 'வால்மீகி இராமாயண'த்தினைப் பற்றி குறிப்புகள் எடுத்தார். அவருக்கு உதவியாக அண்ணா உடனிருந்தார். அப்போது கடுமையான குளிர். கங்கையில் நடுப்பகல் இரண்டு மணிக்குக் கால் வைத்தாலும் உடலை நடுங்க வைக்கும் குளிர்.

ஹரித்துவார் சாதுக்களின் கோட்டை. எந்தத் தெருவுக்குச் சென்றாலும் சந்நியாசிகள். மாலை வேளைகளில் பெரியார் உலாவச் செல்வார். வெண்ணிற தாடி, பொன்னிற மேனி, ஆரஞ்சு நிற சால்வை. அண்ணாவோ கொட்டும் குளிருக்குப் பயந்து முரட்டுத் துணி சட்டையும் போட்டுக்கொண்டு அதற்குள் கரங்களை விட்டுகொண்டு கைகட்டிய வண்ணம் அவர் பின்னால் சென்றார்.

தினமும் புதுப்புது சந்நியாசிகளைக் காணும் ஹரித்துவார் மக்கள் இவர்கள் போகும் காட்சியைக் கண்டு வியந்தனர். இதுவரை காணாத மகிமை பொருந்திய குருமகான், தன் பிரதமச் சீடருடன் செல்கிறார் என்று எண்ணிக்கொண்டு, பயபக்தியுடன் கைகூப்பித் தொழுதனர். சிலர் காலில் விழுந்து வணங்கினர். இதைப் பார்த்து அண்ணா சிரித்துவிட, பெரியார், 'பேசாமல் வா அண்ணாதுரை...' என்று கூறியபடி தாடியைத் தடவிக் கொண்டாராம்.

சாதுக்களையும் சாமியார்களையும் சந்நியாசிகளையும் கண்டித்து வந்த பெரியாரை, சாமியார் என்று எண்ணி ஹரித்துவார் மக்கள் வணங்கியது வேடிக்கைதான்.



படிப்பகம்

padippakam





# நாடகமும், அண்ணாவும்

ஈரோட்டில் அண்ணா இருந்தபோது ஏற்பட்ட கலைப்பற்று நாளாக நாளாக வளரத் தொடங்கி கலையுலகில் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கிற அளவுக்கு அவரை வளர்த்தது. புராதனப் புராணங்களைப் பேசிய சினிமாவை மக்கள் புராணங்களைப் பேச வைத்தார்.

'சந்திரமோகன்' 'நீதிதேவன் மயக்கம்' 'சந்திரோதயம்' 'ஓர் இரவு' 'காதல் ஜோதி' 'வேலைக்காரி'

போன்ற ஏராளமான நாடகங்களை எழுதினார். எழுதியது மட்டுமல்ல; சில நாடகங்களில் நடிக்கவும் செய்தார்.

எம்.ஏ. படித்தவர், ஓர் இயக்கத்தின் தளபதி, அரிதாரம் பூசி நடிக்க ஆரம்பித்ததும் கலையுலகம் பற்றியும், கலைஞர்கள் பற்றியும் இருந்துவந்த கேவலமான எண்ணம் மாறத் தொடங்கியது.

ஒருமுறை அண்ணாவின் நாடகத்தைப் பார்த்த பெரியார் வாய்விட்டுப் பாராட்டத் தொடங்கினார்.

'நாம் பேசும் நூறு கூட்டங்களும் சரி, அண்ணாதுரையின் ஒரு நாடகமும் சரி', என்று கூறினார்.

தலைவர் மெச்சிய தளபதி அண்ணா.

அண்ணா 100



padippakam





# 11

# சிபாரிசு செய்யுங்கள்

ஒருமுறை அண்ணா ஒரு வேலைக்கான சிபாரிசு கடிதத்துடன் ஒரு பெரிய அதிகாரியைப் பார்க்கச் சென்றார்.

அந்த அதிகாரியின் வீட்டு வாசலில் அமர்ந்துகொண்டு, தமது பெயரை எழுதி வேலையாள் மூலம் உள்ளே கொடுத்து அனுப்பினார் அண்ணா.

'அண்ணாதுரை' என்ற பெயரைக் கண்டதும் அந்த அதிகாரி சட்டைக் கூடப் போடாமல் விழுந்தடித்து ஓடி வந்தார்.

'வரணும்! வரணும்!' என்று கை கூப்பியவாறு நின்றார் அதிகாரி. அண்ணாவுக்கு என்னவோ போலிருந்தது.

'உங்களைப் பார்க்க நானே வரலாமென்றிருந்தேன். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல் நீங்களே வந்துவிட்டீர்கள். நான் உங்களைப் பார்க்க விரும்பிய விஷயம் வேறொன்றுமில்லை. எனக்கு வரவேண்டிய பதவி உயர்வு இன்னொருவருக்குப் போய்விட்டது... மிகப் பெரிய அநியாயம் நடந்து விட்டது... உங்களுக்கிருக்கும் செல்வாக்கு எனக்குத் தெரியும்... எப்படியாவது நீங்கள் சிபாரிசு செய்து அந்தப் பதவி உயர்வை எனக்கு வாங்கித் தரவேண்டும். எனக்கும் என் குடும்பத்திற்கும் பெரிய உதவியாக இருக்கும்' என்று அவர் முந்திக்கொண்டு கெஞ்சினார்.

அண்ணா மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தான்வந்த காரியத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூட பேசாமல், 'சரி, ஆவன செய்கிறேன்' என்று திரும்பிவிட்டார். அன்று முதல் அண்ணா வேலை தேடும் படலத்தைக் கைவிட்டார்.

அன்று அண்ணா சிபாரிசு பெற்று வேறு வேலைக்குப் போயிருந்தால், இப்படி ஒரு நல்ல தலைவர், ஒரு நல்ல முதல்வர் கிடைத்திருப்பார் என்பது ஐயம்.



படிப்பகம்

padippakam



## ௨

# உணவை மறந்து சொற்பொழிவை ரசித்தவர்கள்

**கா**ஞ்சித் தலைவன் அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவின் சுவையை நாம் அறிந்தவர்கள்தாம், அப்படிப் பேசக்கூடிய ஆற்றல் பெற்ற ராஜ்ய சபை உறுப்பினர்களையே தன் பேச்சால் உணவை மறக்க வைத்தவர் அண்ணா.

காஞ்சிபுரத்தில் நடந்த தேர்தலில் அறிஞர் அண்ணா தோற்றதும் ஒரு விதத்தில் நல்லதுதான் என்று சொல்ல வைத்தது. டெல்லி ராஜ்ய சபை உறுப்பினர் ஆனார் அண்ணா. அவர் புகழ் தலைநகர் டெல்லியில் பரவியது.

அண்ணா ஆங்கிலத்தில் அழகாகச் சொற்பொழிவாற்றத் தொடங்கினார். ராஜ்ய சபை உறுப்பினர்கள் மெய்மறந்து கேட்டார்கள். பகல் உணவு சாப்பிடும் நேரத்தையும் மறந்து அவரின் சொல் விருந்தை ரசித்தார்கள். அண்ணாவோ சொல்லாட்சியோடு, கருத்துச் செறிவோடு, எடுப்பான குரலில் மிடுக்காக முழங்கிக் கொண்டிருந்தார்.

இடைவேளைக்குரிய நேரம் வந்துவிட்டது. நியாயமாக அவரின் பேச்சு நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தொடர்ந்து பேச, தற்காலிக அவைத் தலைவர் திருமதி வயலட் ஆல்வா அனுமதித்தார். உறுப்பினர்கள் ஒருவர்கூட எழுந்து போகவில்லை. அந்த அளவுக்கு அண்ணாவின் பேச்சால் மகுடிக்குக் கட்டுண்ட பாம்பு போல் கட்டுண்டுக் கிடந்தார்கள் ராஜ்ய சபை உறுப்பினர்கள். அவரின் சொல்நயமும், பேசிய அழகும் அவர்களைப் பிரமிக்க வைத்தன.

இப்படி இதற்குமுன் யாரும் அங்கே பேசியதில்லை என்று ஆச்சரியப்படும்படி செய்து விட்டார் அறிஞர் அண்ணா.

அண்ணா 100



படிப்பகம்

padippakam





# 13

# காந்தியும் அண்ணாவும்

அண்ணாவுக்கும் காந்தியாருக்கும் பல துறைகளில் பொருத்தம் உள்ளது. இருவரும் கல்வியறிவில் சிறந்தவர்கள். இருவரும் சிறை சென்ற செம்மல்கள். அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டவர். காந்தியார் ஆட்சிப் பொறுப்பில் இல்லாதவர். காந்தியார் 'மதுவிலக்கை' அமுல்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடையவர். அண்ணாவும் மதுவிலக்குப் பிரச்சாரத்தை திரைப்படத்திலே இடம்பெறச் செய்ததோடல்லாமல் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரும் பலர் வற்புறுத்தியும் தமிழ்நாட்டில் மதுவிலக்கை அமுல்படுத்தியே தீருவேன் என்று உறுதியாக இருந்தார்.

காந்தியார் முஸ்லிம்களும், இந்துக்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என விரும்பினார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அண்ணா முஸ்லிம்களையும், மற்ற இனத்தவர்களையும் சகோதரர்களாகவே பாவித்ததோடன்றி அவர்கள் ஒற்றுமைக்காகவும் அரும்பாடுபட்டு ஒன்றுபடுத்தி உள்ளார்.

காந்தியார், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் முன்னுக்கு வரவேண்டுமென்று கனவு கண்டார். அதைத் தமிழகத்தில் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதும் செயல் மூலம் நிரூபித்துக் காட்டினார். அண்ணாவும் காந்திஜியைப் போலவே எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டவர்.

ஆந்திர மாநிலத்தின் முதல்வர் பிரம்மானந்த ரெட்டி அண்ணாவைப் பார்த்து, 'நீங்கள்தான் காந்தியார் கண்ட கனவுகளை நினைவுகளாக்குகிறீர்கள். ஆகையால் நீர் தான் எங்களைவிட உண்மையான காந்தியவாதியாகத் திகழ்கிறீர்கள்' என்று கூறியுள்ளார் -இது தோப்பூர் திருவேங்கடம் தரும் தகவல்.



படிப்பகம்

padippakam





படிப்பகம்

padippakam



## 14

# அன்னையைப் போற்றிய அண்ணா

**அ**ண்ணா அவர்களுக்குத் தன் தாயார் மீது அளவுகடந்த அன்பும் பாசமும் உண்டு. பத்து தினங்களுக்கு ஒருமுறையாவது காஞ்சிபுரம் சென்று தாயாரைப் பார்த்துவிட்டு வருவார்.

அப்படிச் செல்லும்போது, தாயார் அருகிலேயே உட்கார்ந்து கொண்டு அன்போடு அவரது நலனை விசாரிப்பார். அவரது கை, கால்களை அமுக்கி விட்டு மகிழ்வார்.

தாயாருக்குக் கண் தெரியாமையால் ஒரு சில சமயங்களில் அவரை எழுப்பி உட்கார வைத்துப் பேசுவார், நடக்கவும் உதவி செய்வார்.

'தாயின் பாதங்களின் கீழ் சொர்க்கம் இருக்கிறது' என்றார் நபிகள் நாயகம். தாயை மதிக்கின்ற வன் தரணியில் போற்றப்படுவான் என்பதற்கு அண்ணா ஒரு கண்முன் உதாரணம்.





படிப்பகம்

padippakam



# 15

# அவன் உள்ளத்தைப் பார்த்தேன்

ஒரு சமயம் பேரறிஞர் அண்ணாவுடன் ஒரு திருமண விழாவுக்குச் சென்றிருந்தோம். ஒரு வீட்டில் மணவிழா விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த வீட்டை சாணம் போட்டு மெழுகி இருந்தார்கள். அதனால் வீட்டில் நுழைந்ததும் ஒரே துர்நாற்றமாக இருந்தது.

அந்த துர்நாற்றத்தில் உட்கார்ந்து எங்களால் சாப்பிடவே முடியவில்லை. ஆனால், அண்ணா அவர்களோ அந்த நாற்றத்தால் முகம் சுளிக்காமல், அவர்கள் போட்ட உணவை தேவாமிருதம் போல் சந்தோஷமாய் ரசித்து சாப்பிட்டார்.

அங்கிருந்து திரும்பி வரும்போது வழியில் அண்ணாவிடம், 'அந்தச் சாப்பாட்டை எப்படி அண்ணா சாப்பிட்டிங்க?' என்று கேட்டேன்.

அண்ணா சொன்னார்: 'நீ சாப்பாட்டையும் இடத்தையும்தான் பார்த்தாய். நான் அவன் உள்ளத்தைப் பார்த்தேன். அவன் நம்மை எல்லாம் தெய்வம் போல் நினைத்துச் சாப்பாடு போட்டான். அதனால்தான் நான் அப்படிச் சாப்பிட்டேன்' அண்ணா மக்கள் மனம் அறிந்த தலைவர் என்பதை காஞ்சி சட்டமன்ற உறுப்பினர் கே.பாலாஜி வியந்து சொல்கிறார்.





படிப்பகம்

padippakam





# 16

# தோல்வி என்பது...

***1962*** *தேர்தல் வந்தது, காஞ்சிபுரத்தில் அண்ணா தோற்றார். அவர் தோல்வியை எப்படிக் கருதினார் என்பதை அவரே பச்சையப்பன் கல்லூரியில் பேசும்போது விளக்கினார்.*

*'புனித ஜெருசலத்திற்காக ஐரோப்பிய நாடுகள் போரிட்டன. ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது. 'ஐரோப்பியப் படைக்குத் தலைமை வகித்த ரிச்சர்டு மன்னன் உள்ளே வரக்கூடாது. மற்றவர்கள் வரலாம்' என்பதே அந்த நிபந்தனை. இதைக் கேட்ட அந்த மன்னன்,*

*'நான் உள்ளே போகாவிட்டால் என்ன? என் படைகள் உள்ளே போகிறது' என்றான். அதுபோல் சட்டசபையில் என்னை நுழையவிடவில்லை. அதனால் என்ன? என் தம்பிமார்கள் ஐம்பது பேர் உருவில் நான் செல்கிறேன்' என்றார்.*

*எதையும் மனநிறைவுடன் ஏற்றுக்கொள்ளும் பக்குவம்மிக்க தலைவர் அண்ணா என்பதற்கு இது ஒரு சாட்சி.*



படிப்பகம்

padippakam





17

# மறப்போம் மன்னிப்போம்

**வி**லைவாசிப் போராட்டத்தின்போது சிறையிலிருந்த பலர், சிறைக்கொடுமை தாங்காது மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே வந்துவிட்டனர்.

வெளியே வந்தவர்களுக்கு வெட்கம். கட்சியோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலையில் அண்ணா தமது பெருந்தன்மையான உள்ளத்தைத் திறந்து சொன்னார்:

'சர்க்காரே அவர்கள் எழுதிய மன்னிப்பை ஏற்று மன்னித்தபோது... அவர்களின் அண்ணனான நான் மன்னிப்பதில் தவறு என்ன...?'

அவர் கட்சியினருக்கு மட்டுமல்ல; தமிழக மக்கள் அனைவருக்கும் அண்ணாவாகவே இருந்தார்.

அண்ணா 100



padippakam





# 18

# அண்ணாவிடம் கலைஞர் போட்ட பந்தயம்

**செ**ன்னை மாநகராட்சித் தேர்தல் நடந்து கொண்டிருந்த நேரம்.

தி.மு.கழகத்திற்கு எவ்வளவு இடங்கள் வரும் என்ற பேச்சு தலைவர்களிடையே வந்தது. தேர்தல் கலையில் வல்லவரான கலைஞர் '45 இடங்கள் வரும்' என்றார்.

'அவ்வளவு வராது' என்றார் நிதானத்திற்குப் பெயர்போன அண்ணா அவர்கள்.

கலைஞர் சொன்னது போல் தி.மு.கழகம் 45 இடங்களில் வெற்றி பெற்றது. அண்ணா ஒரு பவுன் மோதிரம் வாங்கிப் போட்டார் கலைஞருக்கு...! அதைப் பற்றி அவரே கடற்கரைக் கூட்டத்தில் பேசும்போது.

'நான் திருமணமாகி இன்னும் என் மனைவிக்கு என் கையால் ஒரு நகை வாங்கிப் போட்டதில்லை. ஆனால் தம்பி கருணாநிதியிடம் போட்ட பந்தயத்தால் கொளுத்தும் வெயிலில், கடை கடையாகச் சென்று பார்த்து ஒரு மோதிரம் வாங்க வேண்டி வந்தது' என்று கூறி அணிவித்தார்.

அண்ணனுக்கேற்ற தம்பி.



படிப்பகம்

padippakam





## 19

# மது விலக்கு

**த**ஞ்சை பொதுக் குழுவில் தி.மு.கழகத்தில் சிலர் நாட்டு மக்கள் மதுவிலக்கை எதிர்க்கிறார்கள் என்று கூறியபோது, அண்ணா அன்று ஆற்றிய உரை ஒரு பேரிலக்கியமாகும்.

மது வேண்டும் என்று கூறுவோரின் காரணங்களை அலசி ஆராய்ந்தார். அதிலுள்ள பொய்மைகளை விளக்கினார்.

இறுதியாக அவர் பேசினார்: 'எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த பெரியவர்கள் 'கள்' குடித்ததால் கெட்டதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். அவர்களது குடும்பம் செழித்திருந்ததையும் பார்த்திருக்கிறேன்; 'கள்' குடித்ததால் சீரழிந்ததையும் பார்த்திருக்கிறேன். கள்ளைக் குடித்துவிட்டு வந்து அடிப்பதால் அந்தத் தாய்மார்கள் அடி தாளாமல் எழுப்பிய அழுகுரல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கூக்குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறவரை நான் மது விலக்கில் அசையாத நம்பிக்கை கொண்டிருப்பேன்' என்றார்.

குடிமக்களின் வாழ்வு சிறக்க சிந்தித்த தலைவர் அண்ணா.

படிப்பகம்

padippakam





# 20

## நோயுடன் சட்டசபை

அண்ணா நோய்வாய்ப்பட்டபோதும் சட்டசபையில் தவறாமல் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வார்.

திடீரென எழுந்து தனது அறைக்குப் போவார். தயாராக அங்கு டாக்டர் ஊசி மருந்து வைத்திருப்பார். அதைப் போட்டுக்கொண்டு, கையைத் தேய்த்தவாறு வந்து மறுபடியும் சபையில் கலந்து கொள்வார்.

மதியம் ஒரு கொடுமையான நிகழ்ச்சி நடைபெறும். உணவுக்குழாயில் அவருக்கு நோய் இருக்கிறது என்று தெரியாத நேரம். ஆனால் நோய் முற்றிவரும் நேரம்.

சாப்பாட்டு வேளையில் கஞ்சியை எடுத்து வாயில் ஊற்றுவார். கஞ்சி உள்ளே இறங்காது. லேசாகத் தொண்டைக்குழியில் தடவி விட்டுக்கொண்டு அந்தக் கஞ்சியை உள்ளே இறக்குவார்.

உடனே புறப்பட்டு சபைக்கு வந்து ஒருமணி நேரம் உரையாற்றுவார்- நோயின் கொடுமையைச் சகித்துக்கொண்டு.

இன்று சட்டசபைக்கு வராமலே அறிக்கைப் போர் நடத்தும் அரசியல்வாதிகளைப் பற்றி என்ன சொல்ல... அண்ணாவின் கடமை உணர்வு எத்தனை பேருக்கு வரும்!



படிப்பகம்



## 21

## சுவரொட்டிகள் மவுசு

தேர்தல் போராட்டத்தில் சுவரொட்டிகளுக்கு ஒரு மவுசு ஏற்படுத்தியவரே அண்ணாதான். தேர்தல் களத்தில் சுவரொட்டிகளின் பங்களிப்பை அறியச் செய்தவர் அண்ணா என்றால் மிகையாகாது.

சின்னஞ்சிறிய வாசகங்கள், மனதைத்தொடும் கருத்துகள் அமைத்து, 1957 தேர்தலில் வெளியிட்டார்.

**'காகிதப்பூ மணக்காது**
**காங்கிரஸ் சோஷலிசம் இனிக்காது'**

**'நாட்டு வாட்டம் போக்கிட**
**நோட்டு அடித்தால் போதுமா?'**
**'அரியலூர் அளகேசனாரே! நீங்கள்**
**ஆண்டது போதாதா?**
மக்கள் மாண்டது போதாதா?'

இந்தச் சுவரொட்டிகள் தேர்தல் போக்கை பெரிதும் மாற்றியது. இதைக் கண்டு பிற கட்சிகளும் அந்த முறையைப் பின்பற்றின.



padippakam





## 22

# அண்ணாவின் பரந்த மனம்

**நா**ன் அந்தக் காலத்தில் ஜூபிடர் பிக்ஸர்ஸில் பணியாற்றிய போது அறிஞர் அண்ணாவோடு அதிகம் பேசிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அண்ணா எல்லோரையுமே தனக்குச் சமமாக வைத்துப் பழகக்கூடிய பண்பாளர்.

எனக்கு அந்தச் சமயம்தான் முதல் பெண் குழந்தை பிறந்திருந்தது. அண்ணாவிடம், 'என் குழந்தைக்கு நீங்கள்தான் நல்ல பெயரொன்று வைக்க வேண்டும்' எனக் கேட்டேன்.

அதற்கு அண்ணா, 'நான் உன் குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டுமானால் நீ எனக்கு 'நன்றி உள்ள பரிசு' ஏதாவது தர வேண்டும்' எனக் கேட்டார். நன்றியுள்ள பரிசு என்று அண்ணா குறிப்பிட்டது எனக்கு விளங்கவில்லை. அண்ணா குறிப்பிட்டதை இன்னொரு நண்பரிடம் கூறி, 'என்னவென்று விளங்குகிறதா?' எனக் கேட்டேன்.

அந்த நண்பர் யோசித்துப் பார்த்துவிட்டு, அண்ணா பிராணிகளின் மேல் அன்பு காட்டக் கூடியவர். சில செல்லப் பிராணிகளை அம்மாதிரி வளர்த்து வருகிறார். எனவே 'நன்றியுள்ள பரிசு' என்று அவர் கேட்டிருப்பதால் அது ஒரு அழகான நாய்க்குட்டியைக் குறிப்பிட்டுதான் அவர் சொல்லி யிருக்க வேண்டும்' என்றார்.

உடனே, ஒரு அழகான நாய்க்குட்டியைத் தேடிப் பிடித்து வாங்கினேன். அப்போது அண்ணா சிதம்பரம் மாணவர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்ததால் அந்த மேடையிலேயே அவருக்கு அதைப் பரிசாகக் கொடுத்தேன். அதன்பின் அண்ணாவிடம் என் குழந்தையின் பெயரைப் பற்றி நினைவுபடுத்திய பொழுது, அண்ணா ஒரு அழகான பெயரைச் சொன்னார்கள். அந்தப் பெயர்தான் 'தமிழ்க்கனி'.

அண்ணா என் நலத்தை மட்டுமல்லாமல் என் பொருளாதார நிலை பற்றியும் அக்கறையோடு விசாரிப்பார். ஒரு சமயம் என்னை அழைத்து, தான்



படிப்பகம்

padippakam





உபயோகித்து வந்த எம்.டி.டி.1061 என்ற தன்னுடைய காரை, 'நீயே வைத்துக்கொள்' என்று தாராள மனதுடன் என்னிடம் ஒப்படைத்தார்.

அது மட்டுமல்ல; அண்ணாவின் காரை நான் இனாமாக வாங்கினேன் என்பது வெளியே தெரியாமலிருப்பதற்காக ஒரு குறிப்பிட்ட தொகைக்கு காரை என்னிடம் விற்றதாக அண்ணா தனது கைப்பட ரசீது போட்டுத் தந்தார். அண்ணாவின் பெருந்தன்மை யாருக்கும் வராது'' கலைஞரின் கார் ஓட்டுநர் ஏ.வி.பீர்கண்ணு சொல்லிய தகவல் இது.



படிப்பகம்





# 23

## எல்லாவற்றிலும் முதல்வர்!

அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனை அந்நாட்டு மக்கள், 'சுதந்திரத்திற்காகப் போராடியதில் முதல்வர், ஜனாதிபதியாய் ஆனதில் முதல்வர், மக்கள் உள்ளத்தில் பதிந்ததில் முதல்வர்' என்று கூறுவார்கள்.

அண்ணா அவர்களும் தமிழ்நாட்டு முதல்வராக விளங்கினார், தமிழை மறுமலர்ச்சி அடையச் செய்ததில் முதல்வர், இந்தியை எதிர்த்ததில் முதல்வர், சென்னை மாநிலமாக இருந்ததை 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியதில் முதல்வர், கட்டணம் வைத்து வசூலித்து சிறப்புக் கூட்டங்களை நடத்தியதில் முதல்வர், உலகிலேயே 'அண்ணா' என்றழைக்கப் பட்டதில் முதல்வர்.

அரசியலில் குடும்பப் பாசத்தையும், நாகரிகத்தையும் புகுத்தியதில் முதல்வர், கட்சித் தோழர்களை 'தம்பி' என்றழைத்ததில் முதல்வர், அமெரிக்க நாட்டு 'யேல்' பல்கலைக்கழகத்தால் 'உலகத்தலைவர்களில் ஒருவர்' என்ற கௌரவப் பட்டம் பெற்ற இந்தியர்களில் முதல்வர்.

இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டை தமிழ்நாட்டில் கூட்டியதில் முதல்வர், தமிழ்நாட்டில் நாடகத்துறையில், கலைத்துறையில் சீர்திருத்தக் கருத்துகளைப் புகுத்தியதில் முதல்வர், இன்னும் எத்தனையோ சிறப்புகளுக்கெல்லாம் முதல்வராக விளங்கியவர் அண்ணா'' என்கிறார் தோப்பூர் திருவேங்கடம் பூரிப்புடன்.

padippakam





## 24

# அண்ணாவின் உரை வீச்சு

அண்ணாவின் சுவையான உரை வீச்சுகளில் காலத்தால் அழியாத சில:

**'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'**

**'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'**

**'யார் எங்கிருந்தாலும் வாழ்க!'**

**'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'**

**'தம்பியுடையான் பகைக்கஞ்சான்'**

**'கத்தியைத் தீட்டாதே தம்பி புத்தியைத் தீட்டு'**

**'வாழ்க வசவாளர்கள்'**

**'இப்படைத் தோற்கின் எப்படை ஜெயிக்கும்'**

**'மக்கள் குரலே மகேசன் குரல்'**

**'உழைப்புக்கேற்ற ஊதியம் தேவை'**

**'மாணவர்கள் பொன் முட்டையிடும் வாத்துக்கள்'**

**'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'**

**'மறப்போம் மன்னிப்போம்'**

அண்ணா 100

படிப்பகம்

padippakam





## 25

## கட்டுப்பாடு

**1953-ல்** மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டு அண்ணாவும் பல கழகத் தோழர்களும் சிறை ஏகினர். சிறை புகுந்த கழகத் தோழர்கள் சிறைக் கூடத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, கடமையும், கட்டுப்பாடும் தவறாமல் நடந்துகொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தி அதனைக் காத்து வருவதிலே அண்ணா கண்ணுங்கருத்துமாக இருந்து வந்தார்கள்.

ஒரு சமயம் சிறையில் ஒரு குழுவாக நுழைந்த முப்பது பேர் காலையில் வரிசையாக அமரவும், அறைக்குள் இருக்கும் சிறுநீர்ப் பானையை வெளிக்கொண்டு வரவும், சோற்றினைச் சென்று வாங்கிக் கொள்ளவும் மறுத்து விட்டனர். சிறை வார்டன்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் தகராறு வளர்ந்தது. இதைக் கேள்வியுற்ற அண்ணா என்னை அழைத்து, 'அவர்களால் சிறுநீர் பானையை எடுத்து வெளியே வைக்க முடியாதென்றால் நானே வந்து அவர்களின் சிறுநீர்ப் பானைகளை வெளியே எடுத்து வைக்கிறேன்- சோறும் வாங்கித் தருகிறேன், அவர்களிடம் சொல்' என்றார். நான் போய் கழகத் தோழர்களிடம் அண்ணா இப்படி உங்களிடம் சொல்லச் சொன்னார் என்றவுடன் அவர்கள் கண்கலங்கி, 'அண்ணா வரவேண்டாம் நாங்களே முறைப்படி நடந்து கொள்கிறோம். எங்களை மன்னிக்கும்படி அண்ணாவிடம் கூறுங்கள்' என்று தெரிவித்தனர்" நாவலர் நெடுஞ்செழியன் சொன்ன மனிதநேய நிகழ்ச்சி இது.

அன்று சிறையில் அண்ணாவின் சொல்லுக்குத் தம்பிகள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டார்கள். அடுத்து தமிழகமே அண்ணாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டது.



படிப்பகம்

padippakam







படிப்பகம்



அண்ணா
100

# 26

# முன்மாதிரி மாநாடு

அண்ணா 1957-ம் ஆண்டு காஞ்சி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றைய முதல்வரான காமராஜரை அண்ணா அணுகி தன் தொகுதியில் உள்ள தண்டலம் எனும் கிராமத்தில் ஓர் மாநாடு நடத்த ஏற்பாடு செய்தார். அதில் தன் தொகுதி மக்களை வரவழைத்து நேரில் முதல்வரைச் சந்தித்து குறைகளை எடுத்துச் சொல்லச் சொன்னார். காங்கிரஸ்காரர்கள், ‘முதல்வர் அந்த மாநாட்டுக்கு வரக்கூடாது’ என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். அதற்கு முதல்வர் காமராஜ், ‘அண்ணாதுரைக்கு இந்த யோசனை ஏற்பட்டது; உங்களுக்கு ஏற்படவில்லையே என்ன செய்வது’ என்று கூறிவிட்டு மாநாட்டில் கலந்து கொண்டார்.

அண்ணா பேசும்போது, ‘மக்கள் குறைகளைத் தெரிந்து தீர்த்து வைக்க வேண்டியவர் இங்கே வந்திருக்கிறார். அவரை அழைத்துவருவது என் கடமை; அதை நான் செய்துவிட்டேன். என் தொகுதி மக்கள் தங்கள் குறைகளை அவரிடத்தில் நேரில் கூறலாம்’ என்றார். காமராஜர் பேசும்போது, ‘மக்கள் குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் எனக்கும் அண்ணாதுரைக்கும் எந்த கருத்து வேறுபாடும் கிடையாது. உங்கள் குறைகளைக் கவனித்து ஆவன செய்கிறேன்’ என்றார். தமிழகமெங்கும் தண்டலம் மாநாடு ஒரு முன்மாதிரியான மாநாடாகவே அமைந்தது. -சி.எஸ்.பூஞ்சோலை என்கிற அண்ணாவின் நண்பரின் படப்பிடிப்பு இது.

எதிர்க்கட்சித் தலைவர் ஏற்பாடு செய்யும் மாநாடு அதில் மாநில முதல்வர் பெருந்தன்மையுடன் கலந்து கொள்கிறார். அண்ணா-காமராஜர் என்கிற மாபெரும் தலைவர்களின் இந்த அரசியல் பண்பாடு கூட ஒரு முன்மாதிரிதான். இன்றைக்குப் பார்க்க முடியாத பண்பாடு இது.

padippakam



# 27

# பத்திரிகையாளர் அண்ணா

அண்ணா ஆரம்பத்தில் 'பாலபாரதி' மற்றும் 'நவயுகம்' பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்தார். பின்னர் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் நடத்திய 'நீதி' என்ற ஆங்கில ஏட்டின் துணையாசிரியராய் விளங்கினார். இந்தப் பத்திரிகை அப்போதைய முதல்வர் பொப்பிலி அரசரின் ஆதரவில் நடத்தப்பட்டது. அதன்பின்னர் பெரியாரால் ஈரோட்டிலிருந்தும், சென்னையிலிருந்தும் நடத்தப்பட்ட 'விடுதலை', 'குடியரசு' பத்திரிகைகளின் துணையாசிரியராக இருந்து பல கட்டுரைகள் எழுதினார்.

திராவிடர் இயக்க காலத்தில் 'திராவிட நாடு' எனும் பத்திரிகையைத் தாமே சொந்தமாகக் காஞ்சிபுரத்தில் இருந்து நடத்தி வந்தார்.

'தம்பிக்கு' என்ற தலைப்பில் பல கட்டுரைகள் வரைந்தார். அந்தக் கருத்துக்கள் எல்லாம் காலங்கடந்து வாழும் தன்மை வாய்ந்தவை. 'திராவிட நாடு' கொள்கையை விட்டதும் 'காஞ்சி' எனும் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தி வந்தார். தி.மு.க. கழகம் தொடங்கியதும் 'மாலைமணி' நாளிதழின் ஆசிரியராய் அரும்பணியாற்றினார். 'நம் நாடு' நாளேட்டிலும் ஆசிரியராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'ஹோம்லேண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகவும் பின்னர் 'ஹோம்ரூல்' பத்திரிகை ஆசிரியராகவு சிறிது காலம் இருந்தார்.

தன்னை யார் கேட்டாலும் தன்னுடைய தொழில் 'பத்திரிகை' என்று ஆணித்தரமாகப் பலமுறை அண்ணா சொல்லி வந்திருக்கிறார்.

ஒரு பத்திரிகையாளராகவும் அண்ணா சிறந்து விளங்கினார் என்பதற்கு இந்தப் பட்டியல் ஒரு சான்று.




படிப்பகம்

padippakam





## 28

# வாழும் காலத்தில் மதிக்க வேண்டும்

**பா**ரதிதாசனின் பாடலில் அண்ணாவுக்கு அதிக ஈடுபாடு உண்டு. அவருடைய பாடல் வரிகளைத் தமிழகத்தில் கூட்டம்தோறும் எடுத்துச் சொல்லி அவரது பாடல்களுக்குச் செல்வாக்குத் தேடித் தந்தவர்களில் அண்ணாவும் கலைஞரும் முக்கியமானவர்கள்.

அண்ணாவுக்கு முதன் முதலாக 'அறிஞர்' பட்டம் தந்ததும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்தான். இருப்பினும், கடைசி காலத்தில் பாரதிதாசன் அண்ணாவைக் கடுமையாகத் தாக்கினார்.

அவர் எவ்வளவுக்கெவ்வளவு தாக்கினாரோ அவ்வளவுக்கெவ்வளவு புரட்சிக் கவிஞரின் மீது அளவிலாப் பற்று கொண்டிருந்தார் அண்ணா.

தனது கட்சியில் உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கும், வாழ்வில் கீழ்த்தட்டை அடைந்தவர்களுக்கும் நிதி சேர்த்துத் தருவதில் அண்ணா மும்முரமாக ஈடுபட்டார்.

'தியாகிகளை அவர்கள் வாழும் காலத்தில் மதிக்கவில்லை' என்ற பழிச்சொல்லை நம் காலத்திலாவது நீக்க வேண்டும்' என்று பகிரங்கமாக அறிவித்துப் பாடுபட்டவர் அண்ணா. பாரதிதாசனுக்கு நிதி சேர்த்துத் தந்தார்.



படிப்பகம்

padippakam



# ௨

# எழுத்துச் சுதந்திரத்தை மதித்தவர்

**அ**றிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது காங்கிரஸ் நாளேடு 'நவசக்தி'யின் ஆசிரியராக நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது முதலமைச்சர் அண்ணாவின் செயலாளர் சொக்கலிங்கம் புரிந்த ஊழல்களை 'சொக்கலிங்க புராணம்' என்கிற தலைப்பில் தொடர் கட்டுரையாக எழுதிக் கொண்டிருந்தேன். அதற்குத் தேவையான தகவல்களை எனக்கு அளித்தவர்கள் அரசுப் பொறுப்பில் இருந்த இரண்டு உயர் அதிகாரிகள். ஒருவர் சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரி. இன்னொருவர் சீனியர் ஐ.பி.எஸ். அதிகாரி. கட்டுரைகள் அரசு வட்டாரங்களில் மிகுந்த பரபரப்பினை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

முதலமைச்சர் அண்ணாவுக்குத் தர்மசங்கடமான நிலையினை இது ஏற்படுத்தியது. தன்னை வந்து பார்க்கும்படி ஒரு நண்பர் மூலம் எனக்கு அழைப்பு விடுத்தார். மறந்து விடாதீர்கள். ஆளுங்கட்சியான தி.மு.க.வை காரசாரமாக விமர்சித்து எழுதிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சியான காங்கிரஸ் நாளேட்டின் ஆசிரியரான எனக்கு அண்ணா அழைப்பு விடுத்தார்.

நுங்கம்பாக்கம் இல்லத்தில் சென்று அவரைச் சந்தித்தேன். அண்ணாவிடம் எப்போதுமே தனிப்பட்ட முறையில் எனக்கு அன்பும் மரியாதையும் உண்டு. தேநீர் கொடுத்து உபசரித்தார். என் குடும்ப நலன் பற்றி விசாரித்தார். மெதுவாக விஷயத்துக்கு வந்தார்.

'சொக்கலிங்க புராணம் இன்னும் இருக்கிறதா, முடிந்துவிட்டதா?' என அவருக்கே உரிய புன்முறுவலுடன் கேட்டார்.

'புராணம் எப்படி அண்ணா அவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிடும்' என்றேன் நான்.

அவர் சொன்னார்: 'என்னுடைய செயலாளர் சொக்கலிங்கத்தின் ஊழல்களைப் பற்றி எழுதிக் கொண்டு இருக்கிறாய். அது சரியா, இல்லையா என்று





படிப்பகம்

padippakam



அபிப்பிராயம் சொல்லுவது என் வேலையல்ல. அவர் ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி. அவர் தன்னிலை விளக்கமாக பத்திரிகைகளுக்கு விளக்கம் அளிப்பதை நான் விரும்பவில்லை. உன்னுடைய எழுத்துச் சுதந்திரத்தில் தலையிடுவது என்னுடைய நோக்கமல்ல. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். பிறகு உனக்கு எது சரி என்று படுகிறதோ அப்படி செய்" என்று மிகுந்த நட்புரிமையோடு இதை அவர் என்னிடம் சொன்னார்.

மறுநாள் காமராஜரைச் சந்தித்து முதலமைச்சர் அண்ணா கூப்பிட்டு அனுப்பியதையும், அவர் என்னிடம் பேசிக் கொண்டிருந்த விஷயங்களையும் சொன்னேன்.

காமராஜர் பளிச்சென்று எனக்கு ஒரு யோசனை சொன்னார்: "அந்தக் கட்டுரை மூலம் யாருடைய கவனத்துக்கு விஷயத்தைக் கொண்டுவர வேண்டுமோ அதைச் செய்துவிட்டாய். எழுதியவரைக்கும் போதும். அவரே கூப்பிட்டுச் சொன்ன பிறகு நிறுத்தி விடுவதுதான் நியாயம்'.

-அரசியல் ஆய்வாளர் பி.சி.கணேசன் 'நக்கீரன்' இதழுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டவை இது.



படிப்பகம்

padippakam





## 30

## எல்லாரையும் நேசிக்கிறார்

'இப்போது அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை எடுக்க வேண்டும் என்று போட்ட உத்தரவு பற்றி குறை கூறுகின்றார்கள். இதை வைத்துக்கொண்டு அவரை நாத்திகர் என்று குற்றம் சாட்டுவது மடமையாகும். அலுவலகங்களில் வேண்டாம். அது அலுவலகத்தின் அமைதியைக் கெடுக்கும் என்பதால் வேண்டாம் என்கிறார்.





படிப்பகம்

padippakam

இங்கிலாந்தில் இருப்பவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள். அதற்காக இங்கிலாந்து செக்கரட்ரியேட்டிலே இயேசு படமோ, மேரி படமோ வெச்சுக்கல்லே. அலுவலகத்தில் வேண்டாம்' என்று சொல்வதனாலே துவேஷம் ஒண்ணும் இல்லை. அவரைப் பொறுத்தவரை எது மேலேயும் துவேஷம் இல்லை. இதை நான் நிச்சயமாகச் சொல்வேன்.

முஸ்லிம் பண்டிகைக்கு விடுமுறை கொடுத்திருக்காரு. விநாயக சதுர்த்திக்கு விடுமுறை கொடுத்திருக்காரு. தெலுங்கர், மராட்டியர், பஞ்சாபியர், ஜைனர் ஆகியோரின் விழாக்கள் எல்லாத்துக்கும் போறார். சகோதரத்துவமாக வாழணும்னு பேசியிருக்காரு. எல்லோரும் நம்ம தேசத்து மக்கள் என்று அன்பு காட்டுகிறார். அவருடைய ஆட்சி வெற்றியா? என்ற கேள்விக்கு விடை காண முயல்வது அவசரக்காரத்தனம். இருபது ஆண்டு ஆட்சிக்குப் பின்னர் வந்திருக்கிறார். ஒரு கிரிக்கெட் காப்டன் போல் அவரது டீமை நடத்திச் செல்கிறார். நன்றாகத் துவங்கியுள்ளார் என்று சொல்வதே புத்திசாலித்தனமாகும்''. பி.வி.இராச மன்னார் (தலைமை நீதிபதி மற்றும் தமிழக ஆளுநராக பணியாற்றினார்) மனம் திறந்த விஷயங்கள் இவை.

அரசு அலுவலகங்களில் எந்த சாமிப் படமும் வைக்கக்கூடாது என்றது அண்ணாவின் அரசு. இன்றோ ஆசாமிகளின் படம் மாட்டி காக்கா பிடிக்கப்படுகிறது.



படிப்பகம்

padippakam



## 31

## ‘பொடி’ பழக்கம்

**க**ல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது அண்ணா அவர்களுக்கு மூக்குப் பொடி போடும் பழக்கத்துடன் வெற்றிலை, பாக்கு போடும் பழக்கமும் வந்து சேர்ந்து கொண்டது.

மோசூர் கந்தசாமி பிள்ளை எனும் தமிழ்ப் பேராசிரியர், அண்ணா எப்போதும் ஜன்னல் பக்கம் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கவனித்து வந்தார். ஒருநாள் வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போதே அண்ணா ஜன்னல் வழியாக வெற்றிலை, பாக்கு எச்சிலைத் துப்புவதைப் பார்த்து விட்டார் பேராசிரியர்.

வகுப்பு முடிந்ததும் அண்ணாவைக் கூப்பிட்டுக் கண்டித்தார். அந்தப் பழக்கத்தை விட்டுவிடும்படி ஆணையிட்டார்.

‘ஐயா, உண்மையை ஒளிக்காமல் சொல்லட்டுமா? என்னால் அந்தப் பழக்கத்தைவிட முடியாது. பலமுறை முயன்று பார்த்தேன், முடியவில்லை. மன்னித்து விடுங்கள்’ என்று கூறிவிட்டார்.

பேராசிரியர், அண்ணாவின் வெள்ளை உள்ளத்தை- உண்மையைப் பயப்படாமல் கூறும் ஆண்மையைக் கண்டு புன்னகையுடன் பேசாமல் இருந்துவிட்டார்.

அண்ணாவின் இறுதி காலம்வரை அந்தப் ‘பொடி’ பழக்கம் தொடர்ந்தது.




படிப்பகம்

padippakam





## 32

# நல்லதைப் பாராட்டும் பண்பு

அண்ணா தன் மனத்துக்குச் சரியெனப்பட்டதை வரவேற்கும் பண்பு படைத்தவர். நல்லதைக் கண்டால் பாராட்டும் நெறி கொண்டவர்.

ஓ.பி.ராமசாமி ரெட்டியார் முதலமைச்சராய் இருந்தபோது 'இனாம் ஒழிப்புச் சட்டம்' வந்தது, அண்ணா மனமுவந்து அதை வரவேற்றார்.

காங்கிரஸ் கொண்டுவந்த மதுவிலக்குச் சட்டத்தை வரவேற்றார். தாம் ஆட்சி பீடம் ஏறிய காலத்திலும், 'அந்தக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பேன்' என்றார்.

டாக்டர் சுப்பராயன் காலத்தில் திருவள்ளுவருக்கு ஸ்டாம்பு (சிறப்புத் தபால்தலை) வெளியிட்டதைப் பாராட்டி வரவேற்றார்.

டாக்டர் யு.கிருஷ்ணாராவின் தந்தை போன்ற பாசத்தை வாழ்த்தினார்.

நேரு மறைந்தபோது 'ஜனநாயகத்தின் ரட்சகன்' என்று மனதாரப் போற்றினார்.

லால் பகதூர் சாஸ்திரியைப் பற்றி 'எளிமையும் கடமையுணர்வும் மிக்க தலைவர்' என்று பாராட்டினார்.

காமராஜரை 'தமிழ்த் தாயின் தவப்புதல்வர், தங்கக் காப்புக்கு ஒப்பானவர்' என்று கூறி பூரித்தார்.

இப்படி ஒவ்வொருவரையும் குணம் கண்ட இடத்துப் புகழ்ந்தவர்; மாற்றான் தோட்டத்துக்கு மல்லிகைக்கும் மணமுண்டு என்று சொன்ன மேதை அல்லவா. அதைப் பின்பற்றாமல் இருப்பாரா...



படிப்பகம்

padippakam







# 33

# படச்சுருளை விரயம் செய்யாதீர்கள்...!

அண்ணா முதலமைச்சரான பிறகு ஒரு வரவேற்புக் கூட்டம் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பேசிய அண்ணா,

'சொர்க்க வாசல்' என்கிற படத்திற்கு நான் கதை, வசனம் எழுதினேன். காசிலிங்கம் இயக்கினார். அவர் எடுத்த ஒரு காட்சியை எடிட் செய்து எனக்குப் போட்டுக் காண்பித்தார்.

படிப்பகம்

padippakam





அதில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கதாநாயகன் 'க்ளோசப்' ஒன்றைப் போட முடியுமானால் இன்னும் அது சிறப்பாக இருக்கும் என்று அபிப்பிராயம் சொன்னேன். மறுநாள் காலை ஸ்டுடியோவிற்கு வந்தால் அந்த க்ளோசப் ஷாட்டைப் போட்டு மீண்டும் காட்சியைக் காட்டுவதாக இயக்குநர் சொன்னார். சரி என்றேன். நான் மறுநாள் காலை ஒன்பது மணிக்கு ஸ்டுடியோவிற்குப் போனேன்.

காசிலிங்கம் அவரது உதவியாளர்களுடன் குறிப்பிட்ட க்ளோசப் ஷாட்டைத் தேட ஆரம்பித்தார். தேடினார். தேடினார். தேடிக்கொண்டே இருந்தார்.

13000 அடி நீளமுள்ள படத்திற்கு 75,000 அடி படமெடுக்கிறீர்கள் நீங்கள். இதில் நான்கு அடி க்ளோசப்பைத் தேடினால், எப்படிக் கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? நண்பகல் சாப்பாடு முடிந்தது. இன்னும் அந்த ஷாட் கிடைக்கவில்லை. அன்று இரவு 7.30 வண்டிக்கு நான் சேலத்திற்குச் செல்ல வேண்டும். இவர்களோடு சேர்ந்து ஏழு மணி வரை தேடிவிட்டு, ஷாட்டை எடுத்துப் போட்டுக் காட்ட அதைப் பார்த்துவிட்டு பரக்கப் பரக்க ஸ்டேஷனுக்கு ஓடினேன். ரயில் போய்விட்டது. ஒரு வாடகைக் காரைப் பிடித்து சேலம் போய்ச் சேர்ந்தேன். 250 ரூபாய் நஷ்டம்.

உங்கள் படத்தின் நீளம் 13,000 அடி என்கிறபோது 39,000 அடிக்குமேல் ஏன் எடுக்கிறீர்கள்? இந்த விரையம் தேவைதானா? தன் தேவையை நிச்சயம் செய்யக்கூடிய மனத்தெளிவு உங்களிடம் இருந்தால் இந்த விரயம் ஏற்படாது. இதற்குக் காரணம் உங்களுக்குத் தொழில் கற்றுக்கொடுத்த ஆசிரிய இயக்குநர்கள். உங்களுக்குச் சரியாகக் கற்றுக் கொடுக்கவில்லை என்பதுதான் பொருள்" என்றார். (இன்று ஒரு லட்சம் அடி வரை படம்பிடிக்கும் மேதாவிகளை என்ன சொல்வது).



படிப்பகம்

padippakam







படிப்பகம்

padippakam





## 34

# அண்ணாவின் அடக்கம்

அமைச்சர் முத்துசாமி (அண்ணா அமைச்சரவையில் இருந்தவர்). 1967-ல் தேர்ந்தெடுக்கப்பட்டு நாமக்கல் தொகுதியில் அமைந்த ஆண்கள் கலைக்கல்லூரிக்கு முதல்வராக இருந்த அண்ணா பெயரை வைப்பதென்று சர்வகட்சியின் ஒப்புதலைப் பெற்று விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

'விழாவுக்கு வர இருந்த மற்ற அமைச்சர்களை அண்ணா செல்ல வேண்டாம் என தெரிவித்து விட்டார்' என செய்தி கேட்டு அமைச்சர் முத்துசாமி அண்ணா இல்லம் சென்று காரணத்தை வினவுகிறார். அண்ணா கோபமாக, 'கல்லூரிக்கு என் பெயரை வைக்கச் சொல்லி உனக்கு யார் சொன்னது' என்று கேட்டார்.

'யாரும் சொல்லவில்லை. சர்வ கட்சிக் குழு ஏகமனதாக தீர்மானம் இயற்றியது' என்றார்.

'எத்தனையோ தமிழ் வளர்த்த சான்றோர்கள் இருக்கிறார்கள். நான் முதல்வராக இருக்கிற காலத்தில் இப்படி செய்யக்கூடாது' என்றார். 'எல்லா ஏற்பாடு களையும் செய்துவிட்டேன்' என அவர் சொல்லவும், 'இதுவே முதலும் முடிவாகவும் இருக்கட்டும். இனி நடக்கக்கூடாது' என்றார். இப்படியும் தலைவர்கள் இருந்தார்கள்" என்கிறார் மா.முத்துசாமி.

இன்று 'ஏன் என் பெயரை வைக்கவில்லை' என்று எகிறும் அரசியல்வாதிகள்தான் உள்ளனர் என்பது வேறு.



படிப்பகம்

padippakam




## 35

# நன்றி மறவாமை

**1949-ல்** தந்தை பெரியாரை விட்டு அண்ணா பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தார். 1967-ல் அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடித்தது. 18 ஆண்டுகள் பிரிவு தந்தை பெரியாருக்கும், அண்ணாவுக்கும் இடையில். அண்ணா முதல்வரானதும் திருச்சி சென்று தந்தை பெரியாரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். 18 ஆண்டுகளும் பெரியார் அண்ணாவை வசைபொழிந்து கொண்டே இருந்தார். அண்ணா அவரைத் திருப்பித் தாக்கியதில்லை.

அண்ணா திருச்சி செல்ல நினைத்தபோது, 'ராஜாஜி வருத்தப்படுவாரோ' என்றார் ஒருவர். 'சென்னைக்கு வந்த பின்பு பார்க்கக்கூடாதா? திருச்சி சென்று ஐயாவைப் பார்ப்பதற்கு அப்படி என்ன அவசரம்' என்றார் இன்னொருவர்.

அதற்கு அண்ணா, 'என்னை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தியதே அவர்தான். முதலமைச்சர் ஆனதும் அவரை நான் பார்க்காவிட்டால் அது மனிதப் பண்பே ஆகாது' என்றார்.

திருக்குறள் அண்ணாவுக்குப் பிடித்த நூல் மட்டுமல்ல, அந்தக் குறள்வழி நடப்பவர் அண்ணா என்பதற்கு இது ஒரு சான்று.

அண்ணா 100



படிப்பகம்

padippakam





# 36

# தமிழ்த்தாய் எங்கே?

அது இந்தியாவின் விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலகட்டம்.

அப்போது 1938-39-களில் காங்கிரஸ் இயக்கத்தின் சார்பில் ராஜாஜி தலைமையில் சென்னையில் மாகாண சுயாட்சி நடந்து வந்தது.

அன்று முதல்வராக இருந்த ராஜாஜி இந்தியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தினார். அதை எதிர்த்து பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில், தமிழர்கள் போராட்டம் தீவிரமாகக் கிளர்ந்து எழுந்தது.

அண்ணா அவர்கள் இந்தியை எதிர்த்து ஒரு கூட்டத்தில், 'தமிழ்த்தாய்க்கு இந்தி இடையூறாக முடியும்' என்பதாகக் குறிப்பிட்டார்.

அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு காங்கிரஸ்காரர் எழுந்து அண்ணாவை நோக்கி, 'நீங்கள்தான் சுயமரியாதைக்காரர் ஆயிற்றே. உங்கள் தமிழ்த்தாய் எங்கே இருக்கிறாள்?' என்று கேட்டார்.

உடனே அண்ணா சொன்னார்: 'உங்கள் பாரதத் தாய் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் தான் எங்கள் தமிழ்த்தாய் வீற்றிருக்கிறாள்' என்றதும் கூட்டத்தில் கைதட்டல் பறந்தது" என்கிறார் அறிஞர் முல்லை பி.எல்.முத்தையா.



படிப்பகம்



## 37

# பண்பும் பணிவும்

**1938-ம்** ஆண்டு இந்தியை எதிர்த்து நடத்தப்பட்ட கிளர்ச்சியில், அண்ணா கிளர்ச்சி செய்யத் தூண்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அண்ணாவை சென்னை சைதாப்பேட்டை 9-ம் எண் கொட்டடிக்கு அழைத்துச் சென்றார்கள். அது அந்தி சாயும் நேரம். அண்ணாவை சிறைக் காவலர் முன் நிறுத்தினார்கள். 'மணி ஆறுக்கு மேலாகி விட்டது. இந்த நேரத்தில் வந்தால் சோறு ஏது?' என்றார் சிறைக்காவலர்.

அண்ணா சாப்பிட சோறு கேட்பார் என்று எண்ணி காவலர் அப்படி முணுமுணுத்தார். அண்ணாவோ சோர்ந்து கிடந்தார். ஓயாத பயணம். இன்று பிடிக்கிறார்கள். அதோ வருகிறார்கள் என்று

padippakam





அச்சமூட்டினர் பலர். ஆனால் சிறைக் காவலர் கேட்டதும் அண்ணாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

உடனே சிறைக் காவலர், அண்ணா சிரித்ததால் அவரது காவி ஏறிய பற்களைப் பார்த்து, ‘வெற்றிலை, கிற்றலை ஏதும் போடக் கூடாது. கிடைக்காது’ என்றார்.

‘கிட்டே வா! துணியை உதறு, சொக்காயைக் கழற்று, அரைஞாண் கயிற்றை அறுத்து எறி’ என ஆணை இடப்பட்டது. அண்ணா அவ்விதமே செய்தார். காவலர் அண்ணா அருகில் வந்து மெல்லிய குரலில், ‘ஏதாவது அபின், கிபின், கஞ்சா-கிஞ்சா-பீடி-கீடி இருக்கா?’ என்றார். ‘அதெல்லாம் கிடையாது அய்யா! அப்படிப்பட்ட பழக்கமெல்லாம் கிடையாது’ என்றார் அண்ணா.

‘ஆமாம், இங்கே வருகிற எந்தப் பயதான் ஒப்புக் கொள்கிறான்’’ என்றார் காவலர் ‘‘நான் அப்படிப்பட்டவன் அல்ல’ என்றார் அண்ணா மெதுவாக.‘சரி.. சரி.. நீ பெரிய யோக்கியன்தான்’ அதோ பார் மூலையில் சட்டிகள் இரண்டு எடுத்துக் கொள். ஒன்று குடிக்க தண்ணீர் வைத்துக் கொள்ள; மற்றொன்று இரவிலே சிறுநீர் கழிக்க. நிற்காதே! எடுத்துக் கொண்டு 9-ம் எண்ணுள்ள அறைக்குப் போ... அங்கே கம்பளி இருக்கும். விரித்து... படுத்துக்கொள்... உம்... போ’ அதட்டினார் காவலர்.

அண்ணா அமைதியாக அறைக்குள் சென்றார். கம்பளியை விரித்தார்; படுத்தார். பக்கத்து அறைகளில் கைதிகளின் பாட்டொலி கேட்டது. காவலரை நையாண்டி செய்து கைத்தாளமிட்டனர். அண்ணா தனக்குள் சிரித்துக் கொண்டார். அண்ணாவின் இந்தப் பணிவும் பண்பும் எத்தனை பேருக்கு வரும்.



படிப்பகம்

padippakam





## 38

## மருமகள்களுக்குப் பரிசு

**1967-ஆம்** ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக ஆட்சியைப் பிடிக்கும் என்று எண்ணியிருந்தால், அண்ணா தென்சென்னை நாடாளுமன்றத் தேர்தலுக்கு நின்றிருக்க மாட்டார். தமிழ்நாட்டிலுள்ள சட்டப் பேரவைத் தொகுதி ஒன்றில் நின்றிருப்பார்.

ஆனால், அண்ணாவின் இரு மருமகள்களும், ‘தமிழ்நாட்டில் 1967 தேர்தலில் தி.மு.க. வென்று ஆட்சியைப் பிடிக்கும்’ என்று சொல்லியிருக்கிறார்கள். அண்ணாவோ, ‘அவ்வளவு எளிதில்லை’ என்று மறுத்து விட்டார்.

அப்படி தி.மு.க. ஆட்சியைப் பிடித்தால் அண்ணா தங்களுக்கு (மருமகள்களுக்கு) ஆளுக்கு ரூ.500 வீதம் தர வேண்டுமென்று சொல்ல, அண்ணாவும் பந்தயத்திற்கு ஒப்புக் கொண்டார். 1967 தேர்தலில் தி.மு.க. பெரும் வெற்றி பெற்று ஆட்சிப் பீடத்தில் ஏறியவுடன் தான் சொன்னபடியே ரூ.500 வீதம் இரு மருமகள்களுக்கும் பரிசு கொடுத்தார்.



படிப்பகம்

padippakam





# 39

## அரசியல் நாகரிகம்

**அ**ண்ணா முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்முன் டாக்டர் நாவலர், டாக்டர் கலைஞர், அன்பில் தர்மலிங்கம் ஆகியோருடன் 2.3.1967ஆம் தேதியன்று திருச்சியில் பெரியாரின் இல்லத்திற்கே சென்று அவரை நேரில் சந்தித்து தமிழக அமைச்சரவையையே தங்களுக்குக் காணிக்கை ஆக்குகின்றேன் என்று கூறி அவரது ஆசியைப் பெற்றார்.

அது மட்டுமல்ல; சென்னையில் பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் இராஜாஜி, முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் போன்றோரை அவர்களின் இல்லங்களுக்கே சென்று அவர்களது வாழ்த்துக்களையும் பெற்றார். அண்ணாவின் இந்தச் செயலைக் கண்டு அப்போதிருந்த அனைத்துக் கட்சியினரும் மிகவும் போற்றி மகிழ்ந்தனர்.

இப்படிப்பட்ட அரசியல் நாகரிகம், அரசியல் கண்ணியம் இன்றைக்கு எங்கே இருக்கிறது? மறுபடியும் வருமா இப்படிப்பட்ட பண்புள்ள அரசியல் நிகழ்வுகள்?



படிப்பகம்

padippakam





## 40

# அனைவருக்கும் ஒரே மாதிரியான கார்

**அ**ண்ணா ஆட்சிக்கு வந்ததும் நிறைய மாறுதல்கள் செய்தார். நிறைய புது திட்டங்களை வகுத்தார். தமது அமைச்சர்களுக்கென்று ஒரு பாணியை வகுத்தும் கொடுத்தார் எனலாம்.

அண்ணா முதலமைச்சர் ஆனவுடன் காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சர்கள் பலர் பெரிய கார்களை உபயோகித்து வந்தது போல் தனது அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் எவரும் உபயோகிக்கக் கூடாது என்று எண்ணி, 'அனைத்து அமைச்சர்களும் அம்பாசிடர் காரில்தான் செல்ல வேண்டும்' என்று உத்தரவிட்டு அதற்கான கார்களும் உடனடியாக வாங்கப்பட்டனவாம்.

இந்தக் கார் அணிவகுப்பைப் பார்த்தே அண்ணாவின் அமைச்சர்கள் வருகிறார்கள் எனத் தெரிந்து கொள்ளலாம்.

படிப்பகம்

# 41

# உதவியாளரை மதித்த அண்ணா

அண்ணாவிடம் நேர்முக உதவியாளராகப் பணியாற்றி வந்த எஸ்.கஜேந்திரன் என்பவர், ஒருநாள் மாலை 6.30 மணி சுமாருக்கு அண்ணா வீட்டில் வாந்தியெடுக்க ஆரம்பித்து விட்டார். அதே சமயத்தில் அடி வயிற்றில் ஒரு பக்கம் வலிப்பதாகவும் கூறினார்.

அதை அண்ணா அவர்களுக்குத் தெரிவித்த போது, உடனே இரவு சுமார் பத்து மணிக்கு அரசு பொது மருத்துவமனைக்குத் தானே நேரில் வந்து ஆபரேஷன் முடியும் வரை அங்கேயே இருந்து அவரை வார்டில் கொண்டுவந்து படுக்கையில் சேர்த்தபின் நன்கு கவனித்துக் கொள்ளும்படி அங்குள்ள டாக்டர்களிடம் கூறி விடைபெற்றார். பின்னர் அடிக்கடி மருத்துவமனைக்கு வந்தும் அவரைப் பார்த்துச் சென்றார்.

ஒரு உதவியாளருக்காக முதல் அமைச்சரே நேரில் வந்து அடிக்கடி அன்புடன் பார்த்துக் கொள்வது என்பது எத்தனை பெரிய மனிதர்களுக்கு வரும்.



padippakam



# 42

## கங்கை எங்கே உற்பத்தியாகிறது?

நமது பள்ளிக்கூடங்களில் கங்கை எங்கே உற்பத்தியாகிறது என்பதை பூகோள வகுப்பில் சொல்லிக் கொடுக்கும்போது, ‘அது ஹரித்துவாரில் உள்ள மலையில் உற்பத்தியாகி வருகிறது’ என்று ஆசிரியர் சொல்லிக் கொடுக்கிறார்.

தமிழ் வகுப்பில் சொல்லிக் கொடுக்கும்போது தமிழாசிரியர்கள், ‘கங்கை சிவபெருமானின் ஜடாமுடியில் உற்பத்தியாகிறது’ என்று சொல்லிக் கொடுக்கின்றனர்.

தேர்வில் மாணவன், ‘தமிழ் வகுப்பில் சொல்லிக் கொடுத்ததை பூகோள வகுப்பிலும், பூகோள வகுப்பில் சொல்லிக் கொடுத்ததைத் தமிழ் வகுப்பிலும் எழுதினால் அவனுக்கு என்ன கிடைக்கும்? அவன் மேல் தவறு இல்லை என்றாலும், அவனுக்கு மதிப்பெண் கிடைப்பதில்லை.

இதுபோன்ற மாறுபாடான கல்வி முறையானது மாற்றி அமைக்கப்பட வேண்டும். உண்மையான அறிவை மாணவர்கள் பெற வழிவகுக்கப்பட வேண்டும்’ என்றார் அண்ணா.

‘தமிழ்ப் புலவர்களே! ஒரு வார்த்தை தாராளமாக இலக்கியங்களை ஆராய்ச்சி செய்யுங்கள். ஆனால், ஆராய்ச்சியிலேயே மூழ்கி விடாதீர்கள். அடிக்கடி வெளியே வந்து, ஆராய்ச்சியில் கண்ட முடிவுகளைக் கூறி, மக்கள் வாழ்வை வளமாக்க வேண்டியது உங்கள் கடமை’ என்பது அண்ணா வேண்டுகோள்.

படிப்பகம்

padippakam





# 43

# நாடு உருப்பட

**ப**ல ஆண்டுகளுக்குமுன் திரைப்பட இயக்குநர் கே.பாலசந்தர் நடத்திய நாடகத்துக்கு அறிஞர் அண்ணா தலைமை ஏற்றார். அந்த நாடகத்தில் பாலசந்தர் எழுதியிருந்த வசனத்தில், ‘அரசியல் அரசியல்வாதிகளின் கையில் இருக்கக்கூடாது. அப்போதுதான் நாடு உருப்படும்’ எனக் குறிப்பிட்டிருந்தார். அப்போது பேசிய அண்ணா, ‘அரசியல் அரசியல்வாதிகளின் கையில் இருக்கக்கூடாது. அது நல்லவர்களின் கையில் இருக்க வேண்டும், அப்படித்தானே, என்று பாலசந்தரைப் பார்த்துக் கேட்டார் அண்ணா.

இன்றைய தமிழக மக்களும் அண்ணாவின் குரலில் சொல்கிறார்கள்: ‘தமிழக அரசியல் நல்லவர்களின் கைக்கு வரவேண்டும் அப்போதுதான் நாடு உருப்படும்’.



படிப்பகம்

padippakam





## 44

# வேலை தேடிய அண்ணா

**கோ**விந்தப்ப நாயக்கர் பள்ளி, சென்னை சைனா பஜாரில் (பச்சையப்பன் கல்லூரிக்கு அருகில்) இருந்தது. அண்ணா கல்லூரி படிப்பு முடிந்ததும் அதில் ஆசிரியராகச் சிறிது காலம் வேலை பார்த்தார். அப்பொழுது ஆசிரியர் பணிக்கு மிக மிகக் குறைந்த ஊதியம். ஆதலால் அண்ணாவின் சிற்றன்னையார் விருப்பப்படியே அப்போது குமார ராசாவாக இருந்த திரு.முத்தையா செட்டியாரிடம் கல்லூரியில் பணியாற்ற ஒரு சிபாரிசு கடிதம் கேட்கச் சென்றார்.

ஆனால், குமாரராசாவோ அண்ணாவைப் பார்த்து, ‘என்னிடமே உதவியாளராக வந்து விடுங்கள். மாதம் ரூ.120 சம்பளம் தருகிறேன்’ என்றார். அண்ணா வீட்டில் கேட்டு, கடிதம் எழுதுவதாகச் சொல்லிவிட்டு காஞ்சி திரும்பிய உடனே, ‘தாங்கள் கூறியபடி பணியை மேற்கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்’ என்று கடிதம் எழுதி விட்டார்.

அப்போதெல்லாம் ஆசிரியர் பணிக்கு எவ்வளவு சம்பளம் தெரியுமா? பதினைந்து ரூபாய்தான்.




படிப்பகம்

## 45

# அண்ணாவின் இதயம்

அண்ணா 'அறிவகம்' (தி.மு.க. தலைமை நிலையம்) மாடியில் எழுதிக் கொண்டிருந்தார். அப்பொழுது மூக்குப் பொடி டப்பாவை எங்கோ வைத்துவிட்டார்கள். தேடிக் கொண்டிருந்தார்கள். அப்போது சி.வி.இராசகோபால் அண்ணாவிடம், 'பொடி தானே அண்ணா வேணும். இதோ கீழே போய் வாங்கி வர்றேன். நம்ம செங்குட்டுவன் பொடி போடும். அதுகிட்டே வாங்கி வர்றேன்' என்று சொல்லிக்கொண்டே கீழே வந்தார். 'செங்குட்டுவன் கொஞ்சம் பொடி கொடு அண்ணா கேட்கிறார்?' என்றார். 'அண்ணாவா கேட்கிறார். நான் பொடி போடுவது அண்ணாவுக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டேன். 'அண்ணாவுக்கு எல்லாம் தெரியுமப்பா. உன்னைப் பார்த்ததும் நீ எப்படிப்பட்டவன், பொடி போடுவியா, சிகரெட் பிடிப்பியா என்பதெல்லாம் தெரிந்து கொள்வார். சும்மாயிரு; பயப்படாதே! என்று சொல்லிவிட்டு கொஞ்சம் பொடியை வாங்கிக்கொண்டு போனார். அண்ணாவிடம் போய், 'இதோ பாருங்க. செங்குட்டுவன் பொடி போடும்னு உமக்குத் தெரியாதாம். நான் சொல்லிட்டேன்னு ரொம்ப வருத்தப்படுது' என்று சொல்லியிருக்கிறார். உடனே அண்ணா, 'எனக்குன்னு நீ சொல்லியிருக்கக்கூடாது பரவாயில்லை. நீ போய், பொடி அண்ணாவுக்கு இல்லை; எனக்குத்தான்; ஜலதோஷம். அண்ணாவுக்கென்று பொய் சொன்னேன். அப்படின்னு சொல்லிடு' என்று சொல்லியிருக்கிறார். கீழே இறங்கி வந்து சி.வி.இராசகோபால், 'இந்தாப்பா செங்குட்டுவன், நீ ஒரேயடியா பயந்துட்டே இல்லே. நான் அண்ணாவுக்குப் பொடி கேட்கலை. எனக்குத் தான் ஜலதோஷம். அண்ணாவிடம் கேட்கக்கூடாதுன்னு உன்னிடம் வந்து கேட்டேன். அண்ணாவுக்கென்று உன்னிடம் வந்து கேட்டா நீ பெருமைப்படுவேன்னு நினைச்சேன். நீயோ, பயந்துட்டே. பயப்படாதே. அண்ணாவுக்குத்

padippakam





தெரியாது. ஒரு தமாஷ் செஞ்சேன். அவ்வளவுதான்' என்றார். பிறகு மேலே நடந்ததை தலைமை நிலைய பொறுப்பாளர் சண்முகம் மூலம் கேள்விப்பட்டேன். இதுதான் அண்ணாவின் இதயம்'' என்கிறார் மா.செங்குட்டுவன்.

அதனால்தான் அவர் எல்லோருக்கும் அண்ணனாக இருக்க முடிந்தது. மற்றவர்களைத் தமது தம்பிகளாக அன்பு காட்ட முடிந்தது.

படிப்பகம்




# 46

# அண்ணாவின் திருமணம்

**க**ல்லூரியில் படிக்கும்போதுதான் அண்ணா ராணி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

பிற்காலத்தில் சுயமரியாதை இயக்கத் தளபதியாக இருந்த அண்ணா, சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டுவந்த முதலமைச்சராக இருந்த அண்ணா, ராணி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டது பழைய சம்பிரதாய முறைப்படிதான்.



padippakam






## 47

## பட்டம்

அரசியல்-வரலாறு-பொருளாதாரம் ஆகிய பாடங்களில் பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் பெற்றார் அண்ணா.

ஒரு சமயம் பரீட்சை எழுத வேண்டிய நேரத்தில் சிறிது உடல் நலம் குன்றியதாலும், படிப்பதற்கு வசதியற்ற நிலை அவர் குடியிருந்த வீட்டில் இருந்ததாலும், முதல் வகுப்பில் தேற வேண்டிய அண்ணா இரண்டாம் வகுப்பில்தான் தேறினார்.

அண்ணா 100



படிப்பகம்

padippakam





# 48

## அண்ணா பார்த்த வேலைகள்

**க**ல்லூரிப் படிப்பை முடித்ததும் அண்ணா எல்லோரையும் போலவே வேலை தேடும் படலத்தில் இறங்கினார், காஞ்சிபுரம் நகராட்சியில் கிளார்க் வேலை. காஞ்சிபுரத்துப் பள்ளிக்கூடத்தில் (தனியாருடையது) ஆசிரியர் வேலை. பிறகு சென்னையில் கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆசிரியர் வேலை. இப்படி சிறிது காலம் வேலை பார்த்தார்.

அப்போதுதான் 'சண்டே அப்சர்வர்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியரான பாலசுப்பிரமணியம் அவர்களின் நட்பு அண்ணாவுக்குக் கிடைத்தது.

இன்று உலகிலுள்ள எல்லாத் தமிழர்களாலும் 'அண்ணா' என்று அழைக்கப்படும் அவர், தன் வாயால் 'அண்ணா' என்று அழைத்த ஒருவர் சண்டே அப்சர்வர் பாலசுப்பிரமணியம் அவர்கள்தான்.



படிப்பகம்

padippakam





## 49

# அண்ணா சதுக்கம்

சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் 2.2.1969 அன்று இரவு 12.20 மணியளவில் அண்ணாவின் உயிர் பிரிந்தது. குடும்பத்தினர் அண்ணாவின் உடலை காஞ்சிபுரம் எடுத்துச்சென்று அங்கே இறுதிச் சடங்குகள் செய்ய வேண்டுமென்று மிகவும் விரும்பினார்கள்.

ஆனால், டாக்டர் கலைஞர் அவர்களோ, சென்னையில்தான் அண்ணா அவர்களுக்கு இறுதி மரியாதை செய்ய வேண்டுமென்று விரும்பி, குடும்பத்தினரை அதற்கு இணங்கவும் வைத்தார். உடனடியாக அதற்கான இடத்தையும் தேர்ந்தெடுத்தார்.

இன்றைக்கு, சென்னையில் அண்ணா சமாதி உள்ளது என்றால் அதற்கான அத்தனை பெருமையும் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.





படிப்பகம்

padippakam



# 50

# பாம்பும் விஷமும்

சென்னை மயிலாப்பூரில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றபோது, ஒரே மேடையில் பேரறிஞர் அண்ணாவும் மூதறிஞர் ராஜாஜியும் உரையாற்றினார்கள்.

இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். ஆனால் இப்போது அதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். இராஜாஜி பேசி முடிந்ததும் மேடைக்கு வந்தார் அண்ணா.

'பாம்பு ஒருவனைக் கடித்துவிட்டால், அதே பாம்பு, தான் கடித்த இடத்தில் வாயை வைத்து தான் கக்கிய நஞ்சை உறிஞ்சினால்தான் கடிபட்டவன் பிழைப்பான் என்பது மரபு வழிச்செய்தி. அதைப் போல இந்தி மொழியைத் தமிழ்நாட்டுக்கு யார் கொண்டுவந்தார்களோ அவர்களே வேண்டாம் என்கிறார்கள். இதை உணர்ந்து நீங்கள் எல்லோரும் இந்தியை எதிர்க்க வேண்டும்' என்றார் பேரறிஞர் அண்ணா. இதைக் கேட்டு இராஜாஜி வாய்விட்டுச் சிரித்தார்.





படிப்பகம்

padippakam



## 51

# ஆலய பிரவேசம் ஏன்?

திராவிட இயக்க காலத்தில் ஒரு மாநாட்டில், ‘ஆலயப் பிரவேசம்’ அவசியம் என்று கூறி தீர்மானத்தைக் கொண்டு வந்தார் பெரியார்.

உடனே நாவலர் எழுந்து, ‘நாம் பேசுவது பகுத்தறிவு வாதம். நமக்குக் கோயிலைப் பற்றி அக்கறை இல்லை. அப்படியிருக்க, ஆலயப் பிரவேசம் பற்றி நாம் ஏன் தீர்மானம் கொண்டுவர வேண்டும்?” என்று பல மணி நேரம் தமது வாதத் திறமையைக் காட்டிப் பேசினார்.

அவருடைய வலிமையான பேச்சால் தீர்மானம் தோற்றுவிடும்போல் இருந்தது. ‘எங்கே அண்ணாதுரை கூப்பிடு’ என்றார் பெரியார்.

அண்ணாவோ ஒரு மேஜைக்கடியில் கூனிக் குறுகிப் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவரை எழுப்பி, நடைபெற்றதைக் கூறினர்.

மேடைக்கு வந்த அண்ணா, “ஆலயப் பிரவேசம் பகுத்தறிவுவாதிகளுக்கல்ல, பாமரர்களுக்கு. ஒரு ஆதிக்கத்தை உடைத்தெறியும் பணியில் நாமும் கைகொடுக்க வேண்டும். அதுதான் நெறிமுறை, பகுத்தறிவு’ என்று நீண்டதொரு விளக்கம் தந்தார். பின்னர், தீர்மானம் நிறைவேறியது. பெரியார் ‘அப்பாடா...’ என்று பெருமூச்சு விட்டார்.

பெரியாரின் தளபதியாக அண்ணா சொல்லப்பட்டது எத்தனை பொருத்தம் பாருங்கள்.




படிப்பகம்

padippakam

அண்ணா 100

# 52

## காத்திருந்த தலைவன்!

சென்னை ராணி மேரி கல்லூரியில் நடந்த திருவள்ளுவர் விழாவிற்கு என் உறவினர் ஒருவருடன் சென்றிருந்தேன்.

அன்றைய தமிழக முதல்வர் அண்ணாதுரை வந்திருந்தார். மாணவியருக்குப் பரிசு கொடுக்க அழைக்கப்பட்டிருந்த, அண்ணாவின் மனைவி ராணி அண்ணாதுரை தாமதமாக, அண்ணா பேசிக் கொண்டிருக்கும்போது வந்தார். உடனே அண்ணா, ‘தலைவன் வருகைக்காகத் தலைவி காத்திருப்பதை, சங்கப் பாடல்களிலும், தமிழ் இலக்கியங்களிலும் அறிவோம். ஆனால் இங்கே, வள்ளுவர் கூறியதற்கு மாறாக தலைவி வருகைக்காகத் தலைவன் காத்திருக்க வேண்டியதாயிற்று’ என்று சொன்னதும் அவையில் சிரிப்பொலி எழுந்தது. அப்பேச்சை இன்றும் மனதிற்குள் நினைத்து சிரித்துக் கொள்வேன்”. -கும்பகோணம் வாசகர் அனுபவம் இது.



படிப்பகம்

padippakam






## 53

# வாஜ்பாயின் இந்தி வெறி

இந்தி, சட்டப்படி இப்போது ஆட்சி மொழி அல்ல. எனினும் இப்போதும் இந்தி வெறியர்கள் இந்தியிலேயே பேசுகிறார்கள்.

ஜனசங்கத்தைச் சேர்ந்த வாஜ்பாயி என்னும் உறுப்பினர் ஆங்கிலத்தில் நன்றாகப் பேசக்கூடியவர். அவர் மாநிலங்கள் அவையில் பேசும்போதெல்லாம் இந்தியிலேயே பேசுவார்.

அவரிடம் நான் நண்பர் என்ற முறையில் கேட்டேன்: ‘நீங்கள் பேசுவதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டாமா? ஆங்கிலத்தில் பேசக்கூடாதா?’ என்றேன். அதற்கு அவர், ‘நான் வெளியில் வந்ததும் உங்களுக்கு ஆங்கிலத்தில் விளக்கிச் சொல்கிறேன். உள்ளே (இங்கே) இந்தியில்தான் பேசுவேன்’ என்றார்.

அந்த ஜனசங்கத் தலைவர்தான் இன்றைய பி.ஜே.பி. வாஜ்பாயி.

இங்குள்ளவர்களுக்கு இது இந்தி வெறியாகப்படவில்லை. போலீஸ் நிலையத்தைக் ‘காவல் நிலையம்’ என்று சொன்னால் அது தமிழ் வெறியாகப்படுகிறது’ இது பேரறிஞர் அண்ணாவின் அனுபவம்.



படிப்பகம்




# 54

# நாலணா, காலணா எது பெரிசு?

ஒரு சமயம், அறிஞர் அண்ணா சேலத்தில் உள்ள நண்பர் வீட்டில் பகல் உணவு அருந்தச் சென்றிருந்தார்.

இலை போட்டவுடன் முதலில் அப்பளமும் முட்டையும் வைத்தார்கள். சிறிது காற்றடிக்கவே அப்பளம் இலையிலிருந்து பறந்துவிட்டது. உடனே அண்ணா...

'முட்டையின் விலை என்ன?' என்றார். 'நாலணா' என்றார் நண்பர். 'அப்பளத்தின் விலை என்ன?' என்றார். 'காலணா' என்றார் நண்பர்.

உடனே அண்ணா 'பார்த்தீர்களா? காலணா தலைவிரித்து ஆடுகிறது. நாலணா அமைதியோடு இருக்கிறது' என்று சொன்னதும் சாப்பாட்டு மேஜை கலகலப்பு மேஜையானது. இப்படி அண்ணாவின் நகைச்சுவை உணர்வு பல இடங்களில் வெளிப்பட்டிருக்கிறது.



padippakam



## 55

## ஓர் இரவு

**ந**டிப்பிசை புலவர் கே.ஆர்.ராமசாமியின் நாடகக் குழுவினர் தஞ்சையில் தங்கி நாடகங்களை நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் அண்ணா கே.ஆர்.ராமசாமியைச் சந்தித்தார்.

அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகத்திற்குப் பின் வேறு நாடகம் இல்லாததால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த கே.ஆர்.ராமசாமி அடுத்த நாடகம் உடனே வேண்டுமென்று அண்ணாவைக் கேட்டுக் கொண்டார்.

அண்ணாவும் உடனே தருவதாக ஒப்புக்கொண்டு காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார். அன்றிரவு கண்ணன் டாகீசில் பி.யூ.சின்னப்பா-கண்ணாம்பா நடித்த 'கண்ணகி' படம் பார்க்க அண்ணா, சி.வி.ராஜகோபாலுடன் சென்று பார்த்துவிட்டு திரும்பினார். அப்போது இரவு 11 மணியளவில் சி.வி.ராஜகோபால் வந்ததும், உறங்கி விட்டார். ஆனால் அண்ணா உறங்கவில்லை. பேனாவை எடுத்தார். காலை ஆறு மணிக்குள் ஒரு நாடகத்தை எழுதி முடித்தார்.

அந்த ஓர் இரவில் எழுதிய நாடகம்தான் 'ஓர் இரவு' என்ற புகழ்பெற்ற நாடகமாகவும், திரைப்படமாகவும் உருவானது.

அண்ணா 100



படிப்பகம்

padippakam



அண்ணா 100

## 56

# அண்ணாவை தடுத்த அதிகாரி

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த நேரம். அப்போது அரிசி வெளிமாநிலங்களுக்குப் போகக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்திருந்தார்கள். அதனால் ஆங்காங்கே செக்போஸ்ட் வைத்திருந்தார்கள்.

ஒருநாள் விருத்தாசலத்தில் கூட்டம் முடித்துவிட்டு, அண்ணா திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் செக்போஸ்ட்... அண்ணாவின் கார் நிற்கிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அடையாளம் தெரியவில்லை. இரவு நேரத்தில் அண்ணாவைச் சரியாகக் கவனிக்காத இன்ஸ்பெக்டர் டிரைவரைப் பார்த்து 'டிக்கியை' திறந்து விடுய்யா என்று அதட்டுகிறார். வேறு வழியில்லாமல் அவரும் திறந்து விடுகிறார்.

டிக்கி முழுவதும் ரோஜா மாலைகள்... வாழ்த்து மடல்கள். பிறகு அண்ணாவைக் கவனித்த இன்ஸ்பெக்டர், 'ஐயா என்னை மன்னிச்சிடுங்க...' என்று நெளிகிறார்.

ஆனால் அண்ணா தம் உதவியாளரைப் பார்த்து, 'இவர் பெயரைக் குறித்துக் கொள்ளுங்கள்' என்றார். உடனே இன்ஸ்பெக்டர் அழாத குறையாக விழுகிறார். அப்போது அண்ணா அவரைத் தூக்கிவிட்டுச் சொன்னார்: 'உன் பெயரை எழுதச் சொன்னதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப் போன்றவர்கள் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். மகிழ்ச்சி. உங்களை மாவட்ட தாசில்தாராகப் பதவி உயர்வு செய்யவே பெயரை எழுதச் சொன்னேன்' என்றார் அண்ணா.



படிப்பகம்





இதைக் கேட்டதும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நெகிழ்ந்து போய் நின்றார்.

தனது காரைத் தடுத்து நிறுத்தி சோதனைப் போட்ட அதிகாரியின் நேர்மையைப் பாராட்டி அவருக்கு அண்ணா தாசில்தார் பதவி கொடுத்தார். இதுவே இன்று நடந்தால் என்ன நடந்திருக்கும்...

padippakam





## 57

# இருப்பதைக் கொடுங்கள்

**அ**ண்ணா முதலமைச்சராக இருந்த சமயம். அவருடைய காஞ்சிபுரம் வீட்டில் திடீரென்று 'ஃபிரிஜ்' இருப்பதைப் பார்த்தார். வியப்புடன், 'இதை எப்போது வாங்கினீர்கள்' என்று வீட்டாரிடம் கேட்டார்.

'மாதத் தவணையில் வாங்கினோம். நீங்கள் இங்கே வரும்போது, உங்களுடன் வரும் அதிகாரிகள் குளிர்ந்த நீர் கேட்கிறார்கள். கடைக்குப் போய் வாங்கிவர வேண்டியிருக்கிறது' என்று மருமகள் விளக்கமளித்தார்.

'நம் வீட்டிற்கு வருபவர்களுக்கு நம்மிடம் இருப்பதைக் கொடுத்தால் போதும். நமது வசதிக்கேற்ப வாழ்வதுதான் சரியான முறை' என்றார்.

டாக்டர் ஜனார்த்தனன் எம்.ஏ., பிச்.டி. தரும் தகவல் இது.

இன்று ஏகபோக வசதி வாய்ப்புகளுக்காக அரசியல் வர்த்தகம் செய்பவர்களுக்கு இது புரிந்தால் சரி.



படிப்பகம்

padippakam





## 58

# அரசியல் ஒழுக்கம்

அண்ணா முதல்வராக இருந்த நேரம். என் மாமனார் (சி.வி.இராசகோபால்) எனக்கு ஏதாவது ஒரு பதவி வாங்கித் தரவேண்டும் என்கிற எண்ணத்துடன் அண்ணாவைச் சந்தித்து கேட்டிருக்கிறார்.

அதற்கு அண்ணா, 'சண்முகத்தை ஓர் ஏலக்காய் மாலையாக நினைக்கிறேன். அவருக்குப் பதவி தந்துதான் முன்னேற வேண்டுமென்ற அவசியமில்லை. அதெல்லாம் இல்லாமலே வளரும் தகுதி, திறமை அவரிடம் இருக்கிறது. அப்படி ஏதாவது பதவி தந்தால், சி.வி.ஆர். -மருமகனுக்குக் கூட பதவி வாங்கித் தந்துவிட்டான் என்ற பெயர் உனக்கும், சி.வி.ஆர். மருமகனுக்கு அண்ணா பதவி தந்தார் என்ற கெட்ட பெயர் எனக்கும் ஏற்பட்டுவிடும். இந்தக் கெட்ட பெயர் வருவதை நீ விரும்புகிறாயா? என என்னைப் பார்த்துக் கேட்டார்.

'இல்லை அண்ணா, உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். உங்களைப் பார்க்கப் போவதாகச் சொல்லி இவர் அழைத்து வந்தார்' என்று சொல்லிவிட்டு விடைபெற்றேன்" என்றார் ஏ.சண்முகசுந்தரம்.

எத்தனை பக்குவம், எத்தனை அரசியல் ஒழுக்கம் பாருங்கள்.




படிப்பகம்

padippakam



# 59

# சினிமா அதிகம் பார்ப்பவர்

ஒருசமயம் அரசு நிகழ்ச்சி ஒன்று மதுரையில் நடந்தது. அதில் கலந்துகொண்ட அண்ணா மாலை 5 மணி அளவில் திருச்சிக்கு அன்பில் தருமலிங்கம் அவர்களுடன் திரும்பினார். பயணியர் விடுதியில் தங்கினார்கள். அன்பிலை அருகில் அழைத்து ரகசியமாக 'பிளாசா' தியேட்டரில் என்ன படம்? போய் தெரிந்துகொண்டு டிக்கட் வாங்கிவா. மாலை காட்சியே பார்க்கலாம்' என்றார். மகிழ்வுடன் சென்ற அன்பில் உடன் வந்தார்.

காவலர் பரிவாரங்கள் இல்லாமல் படம் ஆரம்பித்தபிறகு திரையரங்கில் நுழைந்தார்கள். இடைவேளை விட்டு விளக்குகள் எரியத் தொடங்கின. எப்படிதான் தெரிந்து கொண்டார்களோ! அண்ணாவைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. அன்பில் வெளியே சென்று படத்தை உடனே ஆரம்பிக்கச் சொன்னார். ஒரு வழியாக அமைதி ஏற்பட்டது.

அண்ணாவுடன் அமர்ந்திருந்த அன்பில் தருமலிங்கம், கவிஞர் கருணானந்தம் சிரித்தனர். 'என்னய்யா சிரிக்கிறீங்க' என்றார். 'பின்னே என்ன அண்ணா? ஒரு முதல் அமைச்சர் இப்படி திரையரங்கில் திரைப்படம் பார்க்க வந்து விட்டாரே என்று மக்கள் உங்களைப் பற்றி தவறாக நினைக்க மாட்டார்கள்?' என்றார் கவிஞர்.

உடனே அண்ணா, 'நீ அப்படி ஏன்யா நெனக்கிறே? நம்ம அண்ணா என்னதான் முதல் அமைச்சரானாலும் பந்தா இல்லாமே நம்மோடு சரிசமமா உட்கார்ந்து திரைப்படம் பார்க்கிறாரேன்னு உயர்வாதான்யா நினைப்பாங்க. என் சுபாவமும் நான் நிறைய சினிமா பார்க்கிற வழக்கமும், எல்லோருக்கும் தெரிஞ்சதுதானேய்யா' என்று சிரித்தார் அண்ணா.

பேரறிஞர் அண்ணாவின் இந்த வாழ்க்கை நிகழ்ச்சி மூலம் அண்ணா சினிமா மீது கொண்ட ரசிப்புத் தன்மையும், சினிமா என்ற அற்புதக் கருவி மூலம் நாட்டை நல்வழிப்படுத்த முடியும், நாட்டுக்கு நல்லது சொல்ல முடியும் என்ற அவரது கொள்கையும் புரியும்.



படிப்பகம்

padippakam







படிப்பகம்

padippakam





௯

# ஆசிரியர் வியந்து போனார்

**க**ல்லூரியில் அண்ணா 'இண்டர்' வகுப்புப் படிக்கிறபோது அந்த வகுப்பு ஆங்கில ஆசிரியர் ஒரு பொருளைப் பற்றி எழுதுமாறு வகுப்பு மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இரவில் மாணவர்களுடைய கட்டுரைகளைத் திருத்த உட்கார்ந்த ஆசிரியர், அண்ணாவின் கட்டுரையைப் பார்த்ததும் திகைத்துப் போய்விட்டார்.

தான் இதுவரை கேட்டறியாத கருத்துகள்கூட அழகான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பது கண்டு வியந்து போனார்.

மறுநாள் அண்ணாவைத் தனியாக அழைத்து, 'அண்ணாதுரை! நீ எழுதிய கட்டுரையில் பல அரிய விஷயங்கள் இருக்கின்றனவே. எந்தெந்தப் புத்தகங்களைப் பார்த்து எழுதினாய்?' என்று கேட்டார்.

அண்ணா பணிவாகச் சொன்னார்: 'சார்! அந்தக் கட்டுரை எந்தப் புத்தகத்தையும் பார்த்து எழுதவில்லை. நானாகவே என் சொந்தக் கருத்துகளைக் கூறியிருக்கிறேன்' என்றார்.

ஆச்சரியத்துடன் ஆசிரியர், 'அண்ணாதுரை! எதிர்காலத்தில் நீ ஒரு தலைசிறந்த எழுத்தாளனாக விளங்குவாய்' என்று ஆசீர்வதித்தார்.

அவர் சொன்னது போல் அண்ணா தலைசிறந்த எழுத்தாளரானது நமக்குத் தெரியுமே.



படிப்பகம்

padippakam



## 61

# பகுத்தறிவாளர் அண்ணா

அறிஞர் அண்ணா தமது இறுதிக் காலம் வரை பகுத்தறிவாளராகவே திகழ்ந்தார், வாழ்ந்தார் என்பதற்குப் பல உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

அண்ணா தமிழக முதலமைச்சராக இருந்தபோது, சுயமரியாதைத் திருமணம் பற்றி மசோதா கொண்டுவந்து நிறைவேற்றும் நேரம். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருத்திருமன்: "இராமாயணத்தில் ராமனும் சீதையும்...' என்று ஆரம்பித்தார்.

உடனே குறுக்கிட்டு அண்ணா சொன்னார்:

'எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கின்ற நேரத்திலே, வாழ்க்கையிலே கஷ்டப்பட்டு, மீண்டும் சேர்ந்த ஜோடிகளைப் பற்றி நினைவுபடுத்தாதீர்கள்' என்றார்.

வரலாற்று ரீதியாக, பிராமணர்கள் தமிழர்களை எவ்வாறு அடக்கி அழுத்தி வந்திருக்கிறார்கள் என்பதைக் குறித்து ஒருமுறை அதைப் பற்றி அண்ணா சுருக்கமாகச் சுறுக்கென்று சொன்னார்.

'ஆரியம் எப்பொழுதுமே நம்மை வீரத்தால் வென்றதில்லை, விவேகத்தால் வென்றதில்லை, வஞ்சகத்தால் வீழ்த்தியிருக்கிறது' வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாம். ஆரியருக்குக் காய்ந்த புல் தர்ப்பையே, தமிழரை தந்திரத்தால் வீழ்த்த ஆயுதமாயிற்று' என்றார்.

அதே போல ஒரு சொற்பொழிவில் 'தசாவதாரம்' பற்றி பேசும்போது, 'தசாவதாரம் என்று சொல்லப்படும் பத்து அவதாரங்களில் இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும்தான் மிகவும் பிரபலமாகப் பொதுமக்களிடையே பரவியது. அதற்குக் கார்ணம்... அவை இரண்டும் நாடகம் நடத்த ஏற்ற கதைகளாக இருந்தன' என்றார்.

படிப்பகம்





# 62

# வாடகை வீடு

அண்ணாவின் கல்லூரிச் செலவு அதிகமாகிறது என்பதால், அண்ணாவுக்குச் சௌகரியமாக இருக்கட்டும் என்று தொத்தா சென்னைக்கே குடி வந்தார். பெத்துநாயக்கன் பேட்டை பகுதியில் வாடகை வீட்டில் குடியிருந்தார்கள்.

அந்த வீடு பல குடித்தனங்கள் இருந்த பெரிய வீடாகும். குழந்தைகளும் குட்டிகளும் ஏராளமாக இருந்தன. அண்ணா படிப்பதற்கேற்ற சூழ்நிலை அங்கில்லை. இருந்தாலும், எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு படித்தார்.

குழந்தைகளும், பெரியவர்களும் பேசி, நடந்து, ஓய்ந்து பின் இரவு 12 மணியாகும். எல்லோரும் அயர்ந்து தூங்கி விடுவார்கள். அப்போது படிக்க உட்காருவார் அண்ணா.

படித்துக்கொண்டே இருப்பார். விடியற்காலை நான்கு அல்லது ஐந்து மணி வரை படிப்பார். வறுமையின் காரணமாகத் தொடக்க காலத்தில் ஏற்பட்ட இந்தப் பழக்கம் அண்ணாவின் கடைசி காலம் வரை இருந்தது.

padippakam





## 63

# கன்னிமாரா (நூலக) நண்பன்

அண்ணா தாம் எழுதும்போது, சொந்தக் கருத்துகளை எழுதினாலும் ஏராளமான புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் கொண்டிருந்தார்.

தொடக்க காலத்தில் பண்டிட் ஆனந்தம் சென்னையில் நடத்திவந்த நூலகத்திலும், பல்கலைக் கழக நூலகத்திலும், செயிண்ட் சேவியர் தெருவில் இருந்த மாநகராட்சி நூலகத்திலும் அண்ணா தனது அதிகப்படியான நேரத்தைச் செலவழிப்பார்.

கல்லூரிப் படிப்பு முடிந்து அரசியலில் புகழ் பெறும் காலம் வரை கன்னிமாரா நூலகம் அவருக்கு முழு நேர நண்பன். ஏறக்குறைய அங்கிருந்த நூல்கள் அனைத்தையுமே அவர் படித்து முடித்தவர் என்றால் மிகையாகாது.

அண்ணா 100



படிப்பகம்

padippakam





# 64

# அண்ணாவைத் தேடி வந்த பாராட்டு!

அண்ணா 'விடுதலை' பத்திரிகையின் துணை ஆசிரியர் பொறுப்பில் இருந்தார். அப்போது பத்திரிகையில் வந்த அண்ணாவின் தலையங்கங்களான ஊரார் உரையாடல், கல்கத்தா பாய்ச்சல், ரிப்பன் மாளிகைச் சீமான்கள் ஆகியவை அண்ணாவுக்குப் பெரும்புகழ் தேடித் தந்தன.

ஈரோட்டில் மூன்று மாடிகளைக் கொண்ட பெரியாரின் வீட்டில், மூன்றாவது மாடியில் அண்ணா படித்துக் கொண்டிருந்தார். அந்த மாடிக்குச் செல்கிற சுழல் படிக்கட்டுகள் குறுகலானவை. அதில் கஷ்டப்பட்டு படி ஏறி வந்தார் பெரியார்.

"அண்ணாத்துரை! அண்ணாத்துரை!" என்று தன்னைக் கூப்பிடுகிற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால் பெரியார் நிற்கிறார். அண்ணா பதைத்துப் போனார்.

'ஏன் இவ்வளவு சிரமப்பட்டு மேலே ஏறி வந்திருக்கீங்க... என்ன சேதி?' என்றார்.

'நீ எழுதின 'ரிப்பன் மாளிகைச் சீமான்கள்' ரொம்ப நல்லா இருந்தது. அதைச் சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்" என்றார் தந்தை பெரியார்.

'இதுக்கென்ன அய்யா அவசரம்... நான் கீழே வர்றபோது நீங்க சொல்லியிருக்கலாமே...'

'இல்லை. நான் யாரையும் பாராட்ற வழக்கமில்லே. உன்னைப் பாராட்டணும்னு நினைச்சேன். உடனே வந்து அதைச் சொல்லலைன்னா அடுத்த நிமிஷம் மனசு மாறினாலும் மாறிப் போயிடும். அதனாலே தான், தோணின உடனே வந்துட்டேன்' என்றார் பெரியார்.

பெரியாரிடம் பாராட்டுப் பெறுவது எளிதில்லை. அந்தப் பாராட்டை அண்ணா பெற்றிருக்கிறார். அதுவும் பெரியாரே தேடி வந்து கூறிய பாராட்டு.



படிப்பகம்

padippakam



# ௧

# இரட்டைக் குழல் துப்பாக்கிகள்

**தி.**மு.கழகம் அமைந்ததையொட்டி ராபின்சன் பூங்காவில் கூட்டம் நடைபெற்றது.

ஏராளமான மக்கள். மழையும் ஏராளமாகப் பெய்தது. அண்ணா பேசத் தொடங்கினார். மழையும் நின்றது.

‘நாம் திராவிடர் கழகத்தாருடன் மோதுவதோ-சாடுவதோ கூடாது. திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள்’.

அண்ணாவின் பேச்சு ‘பிறரைத் தாக்கி வளராதே, பிறர் தாக்குவதைத் தாங்கி வளர்’ என்று புதிய பாதையை வகுத்துத் தந்தது.

‘தி.மு.கழகத் தொடக்க காலத்தில் தலைவர் என்ற பதவி இல்லாமலேயே இருக்கட்டும்’ என்று அண்ணா கட்டளையிட்டார். இதற்கு அவர் கூறிய காரணம்...

‘இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர் இவர் (பெரியார்) ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது. செய்யவும் மனம் வந்ததில்லை, வராது.

‘அதே காரணத்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கூடத் தலைவரை ஏற்படுத்தவில்லை. அவசியம் என்று கருதவில்லை.

நமக்கு நல்வழி காட்டிய பெரியார் அமர்ந்த பீடத்தை- தலைவர் பதவியை- நாற்காலியை காலி யாகவே வைத்திருக்கிறோம்.

அந்த பீடத்திலே வேறு ஆட்களை அமர்த்தவோ அல்லது நாங்களோ அல்லது நானோ அமரவோ விரும்பவில்லை’.

கழகத்திலிருந்து பிரிந்து வந்தபோதிலும் தலைவரை, தான் பிறந்து வளர்த்த இயக்கத்தைத் தாக்காமல் போற்றியே வளர்ந்தார் அண்ணா என்பதற்குச் சான்றான சம்பவம் இது.



படிப்பகம்

padippakam





# ௬

# தேர்தல் சுரம்

**மா**நகராட்சித் தேர்தல் முடிவுகள் வந்த நேரம். அண்ணா தோற்றுவிட்டார். அவருக்காக உழைத்த நண்பர்கள் அவரைத் தேடி வீட்டிற்குப் போனார்கள். அவர் அங்கே இல்லை. அவர் அடிக்கடி செல்லும் நூலகத்திற்குச் சென்று தேடினார்கள். அங்கேயும் இல்லை. பதறிப் போனார்கள் நண்பர்கள். 'அண்ணா தோல்வி வரும் என்று தெரிந்து எங்காவது போய் விட்டாரா?' என்று பீதியுடன் தேடத் தொடங்கினார்கள்.

அண்ணா அவர்களோ- ரீகல் தியேட்டரில் (தற்போது பத்மனாபா தியேட்டர்) 'பட்டினத்தார்' படம் பார்த்துவிட்டு வெளியே வந்தார்.

'என்ன, அண்ணா! தேர்தல் முடிவு வந்திருக்கிறது. நீங்கள் சினிமா பார்க்க வந்திட்டீங்களே" என்று கோபித்துக் கொண்டார்கள்.

'எலெக்ஷன் சுரம் எல்லாம் எலெக்ஷனோடு சரி, அதைப் பற்றி அப்புறம் கவலைப்படக்கூடாது. மக்களுக்கு நாம் அறிந்ததைச் சொன்னோம். அவர்கள் தமக்குப் பிடித்தவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அதோடு எலெக்ஷனை மறந்துவிட வேண்டும்' என்று அண்ணா சொன்ன விளக்கத்தைக் கேட்டு சிலையாப் போனார்கள் நண்பர்கள்.

வெற்றியைக் கண்டால் துள்ளிக் குதிப்பதும், தோல்வியில் துவண்டு போவதும் அண்ணா என்ற பக்குவம் மிக்க மனிதரிடம் இருந்ததில்லை என்பதே இந்த நிகழ்ச்சி சொல்லும் சேதி.



படிப்பகம்

padippakam



# 67

# நம்ம எம்.ஜி.ஆர் படம்

ஒரு சமயம் காரைக்காலில் கூட்டம். கவிஞர் கருணானந்தம், கொத்தங்குடி இராமச்சந்திரன் ஆகியோர் அண்ணாவுடன் சென்றனர். கூட்டம் முடிந்ததும், புதுவையில் முதல் அமைச்சராகப் பின்னாளில் இருந்த இராமசாமி வீட்டில் இரவு உணவு. சாப்பிட்டு முடித்தவுடனே காரில் போய் உட்கார்ந்து கொண்டார் அண்ணா. கார் புறப்பட்டது. திருநள்ளாறு என்ற இடத்தில் கார் பழுதுபட்டது. (கார் பஞ்சர்) சீக்கிரமே வேறு சக்கரம் மாற்றப்பட்டது. பேரளம் என்ற ஊர் வந்தது. அவ்வூர் திரை அரங்கு அருகில் காரை நிறுத்தச் சொன்னார் அண்ணா.

'என்னமோ ஏதோ' என்று விளங்காமல் அண்ணாவைப் பார்த்தனர். 'என்னய்யா பார்க்கிறீர்கள். 'அன்பே வா' படம், நம்ம எம்.ஜி.ஆர். நடித்தது. இது 'கம் செப்டம்பர்' என்ற கதைன்னு கேள்விப்பட்டிருக்கிறேன். பார்த்துவிட்டுப் போகலாம்' என்று காரின் கதவைத் திறக்க முயன்றார்.

உடன் வந்த இராமச்சந்திரன், 'அண்ணா' தியேட்டர் மேலாளர் எனக்குத் தெரிந்தவர். படம் தொடங்கி விட்டார்கள். இடம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு வருகிறேன்' என்று போனார்.

திரும்பி வரும் போது 'திரையரங்கின் உரிமையாளரும், மேலாளரும் பரவசத்துடன் ஓடி வந்தார்கள். வணக்கம் தெரிவித்து அழைத்துச் சென்றனர். 'ஆரம்பிச்ச பிறகு வந்தது நல்லதா போச்சு. இல்லேன்னா கூட்டம் சேர்ந்திடும்' என்று சொல்லிக் கொண்டே படத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் அண்ணா.

படம் நிறுத்தப்பட்டு 'ஸ்லைடு' போட்டார்கள். ஒரே கைதட்டல், ஆரவாரம்! என்ன என்று வியப்புடன் பார்த்தால் 'அறிஞர் அண்ணா வாழ்க' என்று திரையரங்கமே ஒலித்தது. உடனே படமும் தொடங்கப்பட்டது. படத்தை முன்பே பார்த்திருந்த கவிஞர் கருணானந்தம் படம் முடிய ஐந்து நிமிடங்கள் இருக்கும்போதே அண்ணாவை அழைத்துக் கொண்டு அனைவரும் வெளியேறினார்கள்.

அண்ணா 100



படிப்பகம்

padippakam





# 68

## ஒரு உயிரைக் காப்பாற்றினார்...!

**அ**ண்ணா நோய்வாய்ப்பட்டு மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார். யாரையும் அனுமதிக்கக்கூடாது என்று டாக்டர்கள் கூறி, அவ்வாறே செய்தும் வந்தோம். ஒருநாள், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ஒரு பெண் கைக்குழந்தையுடன், ஒரு வக்கீலுடன் வீட்டிற்கு வந்து அண்ணாவைப் பார்க்க வேண்டுமென்று அவரது உதவியாளரிடம் கூறினார்கள். அவர் நிலைமையை விளக்கி, பார்க்க முடியாது என்று கூறிவிட்டார். அவர்கள் அங்கேயே காத்திருந்தனர். சிறிது நேரத்திற்குப் பின் திருமதி ராணி அண்ணாதுரை கீழே வந்தபோது அந்தப் பெண் தன் கைக்குழந்தையை திருமதி அண்ணா காலடியில் போட்டுவிட்டு என் கணவரைத் தூக்கிலிட உள்ளார்கள். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கதறினாள். திருமதி அண்ணா உதவியாளரிடம் இதுகுறித்து கேட்டபோது, ஏற்கெனவே கேட்டு வைத்திருந்த விவரங்களைக் கூறினார். அந்த அம்மையாரும் மிகவும் இளகிய மனம் உள்ளவர். எனவே மாடிக்குச் சென்று விவரங்களைச் சொல்ல, அண்ணா உதவியாளரைக் கூப்பிட்டு முழு விவரங்களையும் கேட்டார்.

இன்னும் இரண்டு தினங்களில் அவரது கணவரை தூக்கிலிட உள்ளதாகவும், இது சம்பந்தமாகத் தங்களைப் பார்க்க ஒரு பெண் வக்கீலுடன் வந்துள்ளதாகவும் தெரிவித்தார். உடனே அவர்களை அழைத்து வரும்படி அண்ணா கூற, அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

அண்ணா தன் நோயையும், வலியையும் மறந்து, முழு விவரங்களையும் கேட்டு அவர்கள் கொடுத்த கருணை மனுவையும் பெற்றுக்கொண்டு, மதுரை சிறையிலிருக்கும் அவரது கணவரைத் தூக்கிலிடுவதை உடனே நிறுத்தி வைக்கும்படி பணித்தார். அதற்கான ஏற்பாடுகளைத் தனது உதவியாளரிடம் கூறினார்.



படிப்பகம்

padippakam





உடனே அப்போது உள்துறை செயலாளராகப் பணியாற்றிய ஏ.வெங்கடேசன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மதுரை சிறை கண்காணிப்பாளருக்கும் விவரங்களை தொலைபேசி மூலம் கூறித் தூக்கிலி டுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முதல்வர் என்பதை விட தன்னை ஒரு மனிதாபிமானம் உள்ளவராக இருந்தார் என்பதற்கு இது ஒரு உதாரணம்.





படிப்பகம்

padippakam





## 69

# பெரியாரின் கொள்கைக்காக...

கைவல்யம் சுவாமிகள் என்பவர் அந்தக் காலத்துச் சுயமரியாதை இயக்க எழுத்தாளர், ஒருநாள் அண்ணாவைப் பார்க்க வந்திருந்தார்.

'அண்ணாதுரை! நீங்க பெரியார்கிட்டே என்ன சம்பளம் வாங்கறீங்க?' என்று கேட்டார்.

'ஏன்... எதற்காகக் கேட்கிறீர்கள்?' என்றார் அண்ணா.

'ஒன்றுமில்லை. உங்களுக்கு மிகவும் கஷ்டமா இருக்குமே. எம்.ஏ. படித்துவிட்டு எழுபத்தைந்து ரூபாய் தான் சம்பளம் என்றால் சரியில்லையே. ஜி.டி.நாயுடுவிடம் வந்து விடுங்கள். அவருக்கும் கொஞ்சம் ஆசை இருக்கிறது. நீங்கள் வருவதாக இருந்தால்...' என்று இழுத்தவாறு பேசினார் கைவல்யம்.

உடனே அண்ணா, 'ஐயா... நாங்கள் இங்கே இருப்பது, கேவலம் பணத்துக்காக அல்ல. பெரியாருடைய இலட்சியங்களும் கொள்கைகளும் நிறைவேற்றத்தான் இங்கே இருந்து பணியாற்றுகிறோமே தவிர, நாங்களும் எங்கள் குடும்பமும் சுகம் பெற வேண்டும் என்பதற்காக அல்ல' என்றாராம்.

இவ்வளவு தூரம் கொள்கையில் அழுத்தமும் பற்றும் கொண்ட புடம் போட்ட தங்கமாக அண்ணா விளங்குவதைக் கண்டு கண்ணீர் மல்கிய கைவல்யம் சுவாமிகள், 'அண்ணாதுரை, நீங்கள் ஒரு இலட்சியப் புருஷர்' என்று பாராட்டினாராம்.

தந்தை பெரியாரின் கொள்கைக்காக மிகக் குறைந்த சம்பளத்தில் வாழ்ந்தபோதும், அவரது கொள்கையிலிருந்து சிறிதும் விலகாமல் தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா.



படிப்பகம்

padippakam



# 70

# கலங்கினார் அண்ணா

**க**ல்லூரி விடுமுறை விட்டதோ, இல்லையோ உடனே காஞ்சிபுரத்திற்குப் பஸ் ஏறி விடுவார் அண்ணா. ஒவ்வொரு கல்லூரி விடுமுறைக்கும் அவர் வீடு சென்றபோது ஒரு மாற்றத்தைக் கூர்ந்து கவனித்து வந்தார். ஏழை, எளிய குடும்பம் ஆனதால் அண்ணாவின் கல்லூரிச் செலவை அந்தக் குடும்பம் தாங்க முடியவில்லை. ஆகவே, தொத்தா தான் அணிந்திருந்த நகைகளில் ஒவ்வொரு நகையாக அடமானம் வைத்து, அந்தப் பணத்தை அண்ணாவின் கல்லூரிச் செலவுக்குப் பயன்படுத்தி வந்தார்.

'தொத்தா... நான் கல்லூரிக்கு இனி போகப் போவதில்லை'.

பதறிப் போய், 'ஏன்... ஏன்... துரை! இப்படிச் சொல்றே' என்று தொத்தா கேட்டார்.

பின்னே என்ன?..., 'நானும் தான் பார்த்துக்கிட்டு இருக்கேன். உங்க நகைகளை வித்து என்னைப் படிக்க வைக்கிறீங்க. வீட்டையெல்லாம் வறுமையாக்கிவிட்டு நான் படிக்க வேண்டாம்?'

'அப்படிச் சொல்லாதேப்பா, நகை இருக்கும், போகும். நீ படிச்சுச் சம்பாதிக்கிறபோது தானாக வரும். எங்களுக்கு என்ன சொத்து இனி வேணும்? நீயும் உன் படிப்பும்தான் எங்க சொத்து. எவ்வளவு கஷ்டப்படுகிறோம் என்று தெரிஞ்சுக்கிட்டு நீ படிச்சா போதுமப்பா' என்று தொத்தா பேசியதைக் கேட்டு அண்ணா கண் கலங்கினார். அன்றிலிருந்து படிப்பில் அதிக கவனம் செலுத்தினார்.

கல்லூரி வாலிபர்கள் பொழுதுபோக்கிலும் விளையாட்டிலும் ஈடுபடுவதைப் பார்த்துச் சபலமேற்படுகிறபோதெல்லாம் 'தொத்தாவின் நகைகள் அடமானத்தில் இருக்கின்றன' என்பதைப் பற்றியும் வெறுங்கழுத்தோடு தொத்தா இருக்கிற காட்சியையும் நினைத்துக் கொள்வார் அண்ணா.

லட்சியவாதிகள் இப்படித்தான் உருவாக்கப்படுகிறார்கள் என்பதை இந்தச் சேதி உணர்த்தும்.



படிப்பகம்

padippakam



அண்ணா 100

# 71

# புறநானூறு-அகநானூறு

**கா**ரில் செல்லும்போது அருமையான உரையாடல்களை நிகழ்த்துவார் அண்ணா.

ஒருமுறை அவருடன் காரில் வந்தவர்கள் அகநானூறு-புறநானூறு ஆகியவற்றுக்குப் பொருள் கூறிக்கொண்டு வந்தார்கள். கருத்து வேறுபாடு மிகுந்து அண்ணாவிடம் அதுபற்றிக் கேட்டார்கள்.

‘புறநானூறு பிறருடன் பகிர்ந்து கொள்ளும் உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்கள். அகநானூறு தானே உணர்ந்து கொள்ளத் தக்கவற்றை வெளிப்படுத்தும் பாடல்கள்’ என்றார் அண்ணா.



படிப்பகம்

padippakam





## 72

# நான் ஒரு மாணவன்

**அ**ண்ணா பெரியவர்களின் கருத்துகளை மறுப்பார். ஆனால் ஒரு துளிகூட அவர்களது மரியாதையைக் குறைக்கும் சொல்லைப் பயன்படுத்த மாட்டார்.

தொடக்க காலத்தில் 'ராமாயணம்' பற்றி அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியாருடன் வாக்குவாதம் நடத்தினார்.

அன்று தலைமை வகித்தவர் வாக்குவாதம் செய்யும் இருவரையும் அறிமுகப்படுத்தும்போது 'இரண்டு பேராசிரியர்கள் இன்று மோத இருக்கிறார்கள்' என்று கூறிவிட்டார்.

அண்ணா பேச எழுந்த போது,

'தலைவர் அவர்கள்- இரு பேராசிரியர்கள் பேசுவார்கள் என்று கூறினார். அது சரியல்ல; ஒரு பேராசிரியர் வந்திருக்கிறார். அவருடன் வாதம் செய்ய மாணவன் வந்திருக்கிறேன். நான் நாவலரின் கருத்தை மறுப்பவனே தவிர அவரது வயதை- அறிவை- மதிக்கத் தகுந்த வாழ்வை மறுப்பவன் அல்ல' என்று கூறியபோது நாவலரே மனம் நெகிழ்ந்து விட்டார்.

padippakam





## 73

# அதை எரித்துவிடு

**தி.**மு.கழகத்தின் சட்டசபை பிரவேசத்திற்குப் பிறகு நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டும் கிளர்ச்சி நடைபெற்றது.

நேருவைப் பற்றி அப்போது ஒரு பத்திரிகை ஆசிரியர் மிகவும் மட்டமாக எழுதிய தகவல் அண்ணாவுக்குக் கிடைத்தது.

உடனே அவரை வரவழைத்தார். அவர் எழுதியதைக் காட்டச் சொன்னார். அந்த எழுத்தைப் படித்துவிட்டு 'இதைப் போடாதே' என்றார். 'ஐயோ அண்ணா , எல்லாம் அச்சாகி விட்டதே' என்றார்.

'அச்சானால் என்ன, எல்லாவற்றையும் எரித்துவிடு' என்றார் அண்ணா.

தமது தம்பிகளிடம் எவ்வளவு பரிவு காட்டினாலும் பிற கட்சித் தலைவர்களை மோசமாக எழுதினால் உடனே கூப்பிட்டுக் கண்டிக்கும் பண்பு உடையவர் அண்ணா என்பதற்கு இது மட்டுமல்ல; இன்னோர் உதாரணமும் இருக்கிறது.

கடற்கரைக் கூட்டமொன்றில் தி.மு.க. தலைவர் ஒருவர் ஆத்திரமிகுதியால் 'காங்கிரஸ் மந்திரிகளைக் கல்லால் அடிக்க வேண்டும்' என்று பேசினார்.

உடனே எழுந்தார் அண்ணா. கடுமையாக, 'என்ன பேசுவது என்று இல்லையா? இப்படிப் பேசலாமா? மன்னிப்புக் கேள்' என்று லட்சக்கணக்கான மக்களிடையே அவரை மன்னிப்புக் கேட்க வைத்தார்.

இன்றைய அரசியலில் இந்தப் பண்பு அப்படியே தலைகீழாக இருப்பது நாம் அறிந்த விஷயம்.



படிப்பகம்



# 74

## ஆட்சி

**ஆ**ட்சி பீடம் ஏறுவதற்கு மக்களால் அவருக்கு (அண்ணாவுக்கு) அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது அவர் மிக அடக்கத்தோடு கூறினார்:

'இது எதிர்பாராத அழைப்பு... இன்னும் ஐந்து வருடங்கள் கழித்துதான் இந்த அழைப்பு வரும் என்று நினைத்தேன்'.

மார்ச் ஆறாம் தேதி பதவியேற்பு. முதல் நாள் இரவு முழுவதும் அண்ணாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. காரணம் என்ன? அவரே சொல்கிறார்:

'கண் மூடித்தான் படுத்திருக்கிறேன். ஆனால், உள் மனத்தில்... கண்ணீரும் கம்பலையுமாக உள்ள ஏழை குடிசையில் வாழ்வோர், கூனிக்குறுகி வாழ்க்கை நடத்துவோர் வந்து 'என்ன வாழ்வு எங்களுக்கென தரப் போகிறாய் அண்ணா?' என்று கேட்கிறார்கள். இப்படி மக்களுக்காகச் சிந்தித்த தலைவன் அவர்.

இப்படி மனசாட்சி உள்ள நல்லவர்களால்தான் மக்களுக்கு நல்லது கிடைக்கும், நன்மை விளையும்.

அண்ணா 100



padippakam





# 75

# போராட்டக் கலை

**போ**ராட்டங்களை எப்படி நடத்துவது என்பன போன்ற விஷயங்களை அண்ணா தமது கட்சியிலுள்ள 'போராட்ட வீரர்களை' வைத்துக் கொண்டு கணக்கிட மாட்டார்.

'போராட்டங்களை நடத்துவது கட்சியிலுள்ள 'வீரர்'களைக் கணக்கில் வைத்துக்கொண்டு நடத்துவது தவறு. கட்சியிலுள்ள கோழையும் தாங்கிக் கொள்ளும் விதத்தில்தான் நடத்த வேண்டும். ஒளிவு மறைவு இல்லாமல் கூறிக் கொள்வேன். எனது கட்சியிலுள்ள கோழை நான்தான்.

ஆகவே, என்னைக் கணக்கில் வைத்துக் கொண்டுதான் போராட்டங்களை நடத்துவேன்' என்பார் அண்ணா.

போராட்டங்களால் தனது கட்சியின் பலம் சிதறிவிடக்கூடாது என்பதில் அவருக்கு இருந்த அக்கறையை இது காட்டும்.

அப்படி அவர் நிதானமாகச் சிந்தித்துதான் மும்முனைப் போராட்டம். இந்தி எதிர்ப்புப் போராட்டம், எழுத்துரிமைப் போராட்டம் ஆகியவற்றை நடத்தினார். மக்களுக்கான போராட்டங்களால் தான் மக்கள் மனதில் கட்சியைப் பதிவு செய்யமுடியும் என நிரூபித்தவர் அண்ணா.



படிப்பகம்

padippakam



# 76

## நெசவு கற்றார்

**ப**ள்ளிப் பருவத்தில் புத்தகங்கள் படிப்பதில் மட்டுமல்ல; காஞ்சிபுரத்தில் அன்றும், இன்றும் சிறப்பாக இருக்கும் நெசவுத் தொழிலைக் கற்பதிலும் ஆர்வம் காட்டினார் அண்ணா. ஒருநாள் வெகுநேரமாகியும், அண்ணா வீடு திரும்பவில்லை. தொத்தா, அங்குமிங்கும் அலைந்து அண்ணாவைத் தேடினார்.

அண்ணாவோ ஒரு நெசவாளியின் வீட்டில் நெசவு வேலைக்கு உதவி செய்து கொண்டிருந்தார். ஊரெல்லாம் தேடி அலைந்த தொத்தா ஓய்ந்துபோய் வீட்டில் அமர்ந்தார். மெதுவாகத் தலையை நீட்டி உள்ளே வந்தார் அண்ணா.

'எங்கப்பா போனே?' என்று கவலையும் கோபமும் தொனிக்க தொத்தாவும் அண்ணாவின் அன்னையும் கேட்டார்கள்.

'நெசவு நடக்குதே, அங்கே போனேன்' என்றார்.

'கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறோம். நீ நெசவுக்கா போறே?' என்றார் தொத்தா.

'நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை அப்படீன்னு வள்ளுவரே சொல்லியிருக்கிறாராம் தொத்தா. வள்ளுவர் சொன்னதுனாலே அங்கே போனேன். நான் செய்தது தப்பா, தொத்தா?' என்று பரிதாபமாகக் கேட்டார் அண்ணா.

பையனின் அமுத மொழிகளைக் கேட்ட தொத்தா வாரியணைத்து 'என் துரை செய்யறது தப்பா இருக்குமா? நீ செய்யறது- தப்பில்லையடா கண்ணு தப்பில்லை' என்று கூறி உச்சியில் ஒரு முத்தமிட்டு விட்டு, 'என்ன இருந்தாலும் ராத்திரி ரொம்ப நேரம் வெளியே இருக்காதே அப்பா! மனசு தாங்கறதில்லே' என்றார். அண்ணாவும் சம்மதித்து தலையையாட்டினார்.





படிப்பகம்

padippakam





# 77

# தாய் யானையைப் போல் பெரியார்

பெரியார் என்னையும், கழகத் தோழர்களையும் தாக்கிப் பேசுகிறார் என்பதற்காக, பல தோழர்கள் வேதனைப்படுகிறார்கள்.

தாய் யானை ஒன்று தன் குட்டியுடன் தண்ணீர் குடிக்கத் தடாகத்திற்குச் சென்றதாம். தண்ணீரைக் கண்டதும் தணியாத ஆசையால் குட்டி யானை தடாகத்திலே குதித்துவிட்டது. குட்டி யானை கரை ஏற முயன்றபோது தாய் யானை துதிக்கையால் குட்டி யானையின் தலையை நெட்டித் தள்ளி தடாகத்தினுள் வீழ்த்தி நெடுநேரம் தடுத்துக் கொண்டிருந்தது. இந்த நிலைமை தாய் யானைக்கு வேடிக்கையாகவும், குட்டி யானைக்கு வேதனையாகவும் இருந்தது.

ஆனால் குட்டி யானை எப்படியோ முட்டி மோதி தாயின் தாக்குதலை மீறி தடாகத்திலிருந்து ஏறிவிட்டது. உடனே தாய் யானை குட்டி யானையின் திறமையைக் கண்டு குட்டியை இழுத்து கட்டியணைத்து துதிக்கையினால் தடவி மகிழ்ந்ததாம்.

தாய் யானையைப் போல் பெரியார் அவர்கள் நம்மை எவ்வளவு தாக்கிப் பேசினாலும் தளராத பொறுமையுடன் நாம் மேற்கொண்ட பணியால் வெற்றி பெறுவோமேயானால் பெரியார் அவர்களும் போற்றிப் புகழ்வது திண்ணம்" என்றவாறு அன்று அண்ணா உவமைநயத்தோடு மட்டுமல்ல; எதிர்காலத்தையும் ஊடுருவி அறியும் தீர்க்கதரிசியாக விளக்கினார்; அவர் சொன்னது போல நடந்தது" என்கிறார் தோப்பூர் திருவேங்கடம்.



படிப்பகம்



## - 78 -

**1957** தேர்தல் நேரம். அண்ணா காஞ்சியில் போட்டியிடுகிறார். காங்கிரசார் அவரை மூர்க்கத்தனமாக எதிர்த்தனர். ஒருநாள் அண்ணா எழுந்து வெளியே வந்ததும் அவர் வீட்டிற்கு எதிரில் உள்ள மின்விளக்குக் கம்பத்தில் காங்கிரசார் கையில் எழுதி ஓர் தட்டியை மாட்டியிருந்ததைப் பார்த்தார். அந்தத் தட்டியில் அவர் பிறப்பு பற்றி மிக மிகக் கீழ்த்தரமாக எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் ஆத்திரமுற்று நான் அதை அகற்றச் சென்றேன். அண்ணா அவர்கள் பொறுமையாக என்னை அழைத்து, 'ஆத்திரப்பட வேண்டாம். அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். நீ ஒன்று செய்ய வேண்டும். பகலில்தான் அந்தத் தட்டியைப் படிக்க முடியும். இரவில் எல்லோரும் படிப்பதற்கு வசதியாக ஓர் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கை ஏற்பாடு செய், என்று பணித்தார். திகைத்தேன். 'நான் சொன்னதைச் செய்' என்று வற்புறுத்தினார். அப்படியே செய்தேன்.

மறுநாள் அந்தத் தட்டி அங்கே இல்லை. யார் அதை வைத்தார்களோ அவர்களே வெட்கப்பட்டு கழற்றி எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். *(சி.எஸ்.பூஞ்சோலை, காஞ்சி)*

அண்ணா 100

padippakam



## - 79 -

**1967-ம்** ஆண்டு தேர்தல் நேரத்தில் தருமபுரி மாவட்டத்திற்கு அண்ணா வந்தார். அப்போது ஓசூர் தி.மு.கழகம் வளராத பகுதியாகும். பகல் 10 மணிக்கு கூட்டம். மாணவர்களும், மக்களும் அதுவரை ஓசூர் பகுதியே கண்டிராத வகையில் கூட்டமாகக் கூடிவிட்டனர். பொதுக்கூட்டத்தில் உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தோம். அந்த இல்லத்துக்கு அறிஞர் அண்ணாவை அழைத்துச் சென்றபோது நான் மனவேதனைப்பட்டேன். காரணம் அது ஒரு சிறிய குடிசையாகும். அங்கு அவர்கள் பரிமாறிய உணவை மிகப் பிரியமாக அண்ணா சாப்பிட்டார். நானும் கே.இராசாராமும் அந்த உணவை உண்பதற்குச் சற்றுத் தயங்கினோம்.

அண்ணா அவர்கள் எங்களைப் பார்த்து, கண் ஜாடைக் காட்டி எங்களையும் சாப்பிட வைத்த சம்பவத்தை- காட்சியை என்றும் நாங்கள் மறக்க முடியாது. உணவுக்குப்பின் அவருடைய இல்லத்தில் விரித்து வைத்திருந்த கோரைப்பாயில் தன் கையைத் தலையணையாக்கி சற்று ஓய்வெடுத்துக் கொண்டார்.

அங்கிருந்து கிளம்பி செயமங்கலம் என்ற ஊருக்கு வந்தோம். அங்கு ஒரு முஸ்லிம் நவாப் என்பவர் அவர். அவரது துணைவியாரைக் கொண்டே ஒரு மாலையை ஒருவாரமாகத் தொடுத்து அதை அண்ணாவுக்குப் போட்டார். அந்த 'மாலையை எடுத்து காரில் வை' என்றவுடன் எல்லோரும் மகிழ்ந்தோம். அறிஞர் அண்ணா முதலமைச்சர் ஆனபோது நான் தருமபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் அவரை நேரில் சந்திக்க வேதனைப்பட்டேன்.

அண்ணா அவர்களுடைய நேர்முக உதவியாளர் திரு.சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மூலம் தந்தி



படிப்பகம்



வாயிலாக என்னை வரவழைத்து எனக்கு ஆறுதல் கூறியதோடு, 'உன்னுடைய அண்ணன் முதலமைச்சராகப் பதவி ஏற்கின்றபோது நீ நேரில் வந்து சந்தித்து மகிழ்ச்சியடையாமல் வேதனையோடு இருக்கிறாயே என்றுதான் உன்னை நான் வரச் செய்தேன். நீ வருந்தாதே' என்றார்'' சொல்கிறார் எச்.எல்.முருகேசன், எம்.எல்.சி. அரூர்.





## - 80 -

அண்ணாவுடன் நெருங்கிப் பழகும் தம்பியராகிய நம்மில் பலருக்கு அவரிடம் கோபம் வந்திருக்கும். அதுபோல் அண்ணாவுக்கும் சிலரிடம் கோபம் வந்திருக்கும். மற்ற கோபங்களுக்கும், இக்கோபத்திற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. அண்ணா கோபமாக இருக்கிறார் என்றால் அவரது நெற்றிப் புருவங்கள் மட்டுமே பேசும், வாய் பேசாது. தம்பிமார்கள் தவறு செய்கிறபொழுது, திருந்தக் கையாளும் ஆயுதம், இந்த மௌனம்தான். ஆனால் அந்தக் கோபம் சான்றோர்களுக்கு நீண்ட நேரம் நிலைத்திருப்பதில்லை. நீரில் அம்பு புகுந்து ஏற்பட்ட வடுவுபோல் மாறிவிடும்.

நான் இரண்டு, மூன்று தடவை கோபித்துக்கொண்டு பேனாவிடமும் மையிடமும் ஓடியிருக்கிறேன். எழுதவும் படிக்கவும் தெரிந்த இளைஞர்களுக்கு, நேரடியாகக் கூறமுடியாத நிலை ஏற்பட்டால், உடனே பேனாவிடமும், தாளிடமும் தமது கோபத்தைக் காட்டி விடுவர். அப்படி நான் காட்டி இருக்கிறேன். அண்ணா சிறுவர் மனநிலை தெரிந்தவராகையால் அம்மாதிரிச் சம்பவங்களைக் கவனத்தில்கூட வைத்துக் கொள்வதில்லை. எழுதிய நாம்தாம் அவரைச் சந்திக்கிறபொழுது வெட்கப்பட வேண்டும்.

அண்ணா, தனிப்பட்டவர்களுக்குக் கடிதம் எழுதுவதென்பது அபூர்வமான காரியங்களில் ஒன்று. இதைப் பார்த்த பிறகுதான், மனநிலை மாற்றங்களை வைத்து பேனாவிற்கும், மையிக்கும் அடிமையாகக்கூடாது என்ற பாடத்தைப் பெற்றேன்.

அண்ணாவின் கண்டிப்பு முறை அலாதியானது. தவறு செய்தவர்களை நேரடியாகக் கேட்க மாட்டார். ஆனால் அந்தத் தவறைக் கண்டித்து, வேறு சிலரிடம் பேசுவார். அவருக்குத் தெரியும்,. இந்தக் கண்டனம், தவறு செய்தவருக்கு எட்டி விடுமென்று. அப்படிச் சிலரை அஞ்சல் பெட்டியாக்கிக் கண்டனங்களை



அனுப்புவார். நேரடி விசாரணை மிகக் குறைவு. ஆனால் அப்படி ஒன்றிரண்டு விசாரணைகளை நேரில் கண்டிருக்கிறேன். அவை மிகவும் கடுமையான விசாரணையாக இருக்கும். சொல்லடியும், பார்வை இடியும் தாங்கக்கூடியதாக இருக்காது".

-இப்படி அண்ணாவின் கோபத்தைப் படம் பிடித்தவர் முன்னாள் எம்.பி. தில்லை வில்லாளன். மேன்மக்களின் கோபம் இப்படித்தான் இருக்கும்.



அண்ணா 100

# - 81 -

கல்லூரியில் இண்டர் வகுப்பு முடிந்து குடும்பத்திலுள்ள வசதிக்குறைவு காரணமாக அண்ணா தமது படிப்பைத் தொடருவதில்லை என்று முடிவு செய்துவிட்டார்.

இந்தச் செய்தி அன்றைய பச்சையப்பன் கல்லூரி முதல்வர் சின்னத் தம்பிப் பிள்ளையவர்களின் காதில் விழுந்தது. அண்ணாவை அழைத்துக் கேட்டார்.

'அண்ணாதுரை! நீ படிப்பைத் தொடரப் போவதில்லை என்று சொன்னாயாமே?'

'ஆமாம், சார்! குடும்ப நிலை அப்படி!' என்றார்.

'இண்டரில் பஸ்ட் கிளாசில் பாஸ் செய்த நீ, இப்படிப் படிப்பைத் தொடராது விட்டால் எப்படி? நீ பி.ஏ. ஆனர்ஸ் படிப்பைத் தொடர்ந்து படிக்க வேண்டும்' -முதல்வர்.

'பி.ஏ. ஆனர்ஸ் மூன்று வருடம் படிக்க வேண்டும். அவ்வளவு வசதி இல்லை' அண்ணா.

சிறிது யோசித்தார் முதல்வர்.

'சரி... அந்த மூன்று வருடங்களுக்குரிய புத்தகச் செலவை நான் ஏற்றுக் கொள்கிறேன். அப்போதாவது... படிப்பாயா?'

'சரி' என்று தலையசைத்தார் அண்ணா.

'உன்னைப் போன்ற மாணிக்கங்கள் இப்படி இடையிலேயே படிப்பை நிறுத்துவது தகுமா? நன்றாகப் படி... போ!' என்று ஆசீர்வதித்தார் முதல்வர்.

எந்த அண்ணாவுக்காக லட்சோபலட்சம் மக்கள் தங்கள் ஐஸ்வரியங்களையெல்லாம் கொட்டித் தரத் தயாராக இருந்தார்களோ அந்த அண்ணா வறுமை காரணமாக கல்லூரி முதல்வரின் கருணையினால் புத்தகங்கள் பெற்று தமது படிப்பைத் தொடர்ந்தார்.

அண்ணா முதல்வரான பின் பல ஏழைகளின் படிப்புக்கு உதவியிருக்கிறார். நல்லவர் உள்ளம் நல்லதே நாடும்.

padippakam





- 82 -

பேரறிஞர் அண்ணா, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 'விடுதலை' நாளிதழில் பணியாற்றும்போது, பரதன், வீரன், சௌமியன் போன்ற புனைபெயர்களில் பல கட்டுரைகளை எழுதி, இளம் உள்ளங்களுக்கு வேகம் ஊட்டினார்.

'விடுதலை'யில் வந்த 'தலையங்கங்கள்' அந்நாளில் பெரிதும் பாராட்டப்பட்டவை.

'கல்கத்தாக் காய்ச்சல்', 'ஓமான் கடற்கரையில்', 'ரிப்பன் மாளிகைச் சீமான்கள்', 'வங்கம் தந்த தங்கம் மறைந்தார்' ஆகியன.

இதில் 'ரிப்பன் மாளிகைச் சீமான்கள்' தலையங்கம் பெரியாருக்கு ரொம்பப் பிடித்தது. அந்தக் கட்டுரையை படித்து விட்டு அண்ணாவைத் தேடிப் போய் பெரியார் பாராட்டினார்.

அண்ணா ஒரு எழுத்தாளர், பேச்சாளர் மட்டுமல்ல; ஓவியரும்தான்.





படிப்பகம்

## - 83 -

**எ**ப்படியாவது அண்ணாவைத் தமது அணியில் சேர்த்துவிட வேண்டும் என்று ஈரோட்டிலிருந்தபடியே சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் பெரியார்.

அப்போது நடைபெறவிருந்த துறையூர் சுயமரியாதை மாநாட்டிற்கு யாரைத் தலைவராகப் போடுவது என்ற பிரச்சினையை எடுத்துக்கொண்டு நண்பர்கள் பெரியாரிடம் வந்தார்கள்.

உடனே பெரியார், 'அண்ணாதுரைதான் தலைவர். உடனே தந்தி கொடுத்து ஐந்து நாளைக்கு முன்பே வரச் சொல்லி விடுங்கள். அவரைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது' என்று கட்டளையிட்டார்.

ஐந்து நாட்களுக்கு முன்பே வந்துவிட்டார் அண்ணா- கையில் ஒரு பெரிய புத்தகக்கட்டுடன்.

மணிக்கணக்காக ஆங்கிலத்திலும், தமிழிலும் முன் தயாரிப்பு இல்லாமல் பேசுபவர் என்று பிற்காலத்தில் பெயரெடுத்த அண்ணா, அன்று அந்த மாநாட்டில் பேசவிருந்த பேச்சை அச்சடித்துக் கொண்டு வந்து பேசினார்.

பெரியார் மெதுவாக அண்ணாவிடம் தமது பத்திரிகையான 'விடுதலை'யில் பணியாற்ற வருமாறு கேட்டார். யோசித்துச் சொல்வதாக அண்ணா வழக்கம் போல் சொன்னார்.

'நீங்க எப்பவும் இப்படித்தான். என்ன யோசனை... வெங்காயம். 'சட்டு புட்டு'ன்னு ஒத்துக்க வேண்டியதுதானே' என்று சலித்துக்கொண்டார் பெரியார். அதன்பின் அண்ணா 'விடுதலை' பத்திரிகையில் சேர்ந்துவிட்டார்.

padippakam



## - 84 -

**த**மிழ்நாடு அரசு பேருந்துகளில் எழுதப்பட்டிருந்த குறள் குறித்து ஒரு விவாதம் நடந்தது. காங்கிரஸ் உறுப்பினர் வினாயகம் இதுபற்றி வினா எழுப்பினார்.

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'.

என்கிற குறள் பஸ்களில் எழுதப்பட்டிருக்கிறதே 'இது யாருக்காக?' என்று அண்ணாவிடம் வினாயகம் கேட்டார்.

'நன்றாக அண்ணாவைச் சிக்கவைத்து விட்டார் வினாயகம்' என்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் நினைத்துக் கொண்டார்கள். அந்தக் குறள் பேருந்தில் பணிபுரியும் ஊழியர்களுக்காகவே எழுதப்பட்டது என்று அண்ணா பதில் அளித்தால், அவர்கள் வாய்ச் சொல்லில் அடக்கம் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதாக அமைந்துவிடும். இதற்காக அவர்கள் வருத்தப்பட நேரிடலாம்.

பயணிகளுக்காக எழுதப்பட்ட குறள் என்றால், பொதுமக்களின் மனம் வருத்தப்படலாம். எனவே, அண்ணாவின் நிலைமை எப்படிப் பார்த்தாலும் சிக்கலாக இருப்பதைக் கண்டு சட்டமன்றத்தில் ஒரு வித பரபரப்பு ஏற்பட்டது.

கொஞ்சமும் தயக்கமில்லாமல் அண்ணா பதிலளித்தார்.

'யாருக்கெல்லாம் நா இருக்கிறதோ, அவர்கள் எல்லோருக்காகவும்தான் இந்தக் குறள் எழுதப்பட்டிருக்கிறது' என்றாரே பார்க்கலாம். சபை ஆர்ப்பரித்தது.





படிப்பகம்





## - 85 -

**அ**ண்ணா அவர்களைப் போல் உவமையோடு சொற்பொழிவாற்றுகின்ற, எழுதுகின்ற ஆற்றல் படைத்தவர்கள் மிகவும் சொற்பமானவர்களே எனலாம். அப்படிப்பட்டவர்களில் அண்ணா முதன்மையானவர், அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் முதல் முறையாக வேலூர் வந்திருந்த நேரத்தில் கூறிய அழகிய உவமை என்னுடைய உள்ளத்தில் இன்றும் பசுமையாக இருக்கின்றது.

'கட்சி என்பது இடுப்புக்குக் கீழே கட்டிக் கொள்ளும் வேட்டியைப் போன்றது. மேல் துண்டு இல்லாமல் வேண்டுமானால் வெளியில் நடந்து செல்லலாம். வேட்டியில்லாமல் வீதியிலே செல்ல முடியாது. ஆகையால் எங்களுக்கு முக்கியமானது கட்சிதான்' என்று ஆணித்தரமாக படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் புரியும்படி விளக்கினார்.

மேலும் சொன்னார், 'ஆட்சி என்பது நீங்கள் கொடுத்திருக்கிற வைர மோதிரத்துக்குச் சமம். ஆகையால் நாங்கள் அந்த வைர மோதிரத்தை அடுத்த தேர்தல் வரை பத்திரமாக பாதுகாத்துக் கொடுப்போம், வைர மோதிரத்தை அணிந்துகொண்டு கையை வீசி நடக்க மாட்டோம்' -என்று அடக்கமாகக் குறிப்பிட்டார்.

கேட்டுச் சொன்னவர் தோப்பூர் திருவேங்கடம்.



- 86 -

பேரறிஞர் அண்ணாவுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கான நாளை அமெரிக்க டாக்டர் மில்லர் குறிப்பிட்டார். க.ராசாராம் அண்ணாவிடம் வந்து தெரிவித்தார்.

'அப்படியா... ஒரு இரண்டு நாட்கள் தள்ளிப் போடச் சொல்ல முடியுமா?' என்றார் அண்ணா.

டாக்டரிடம் இது சொல்லப்பட்டது.

'ஏன், நான் சொன்ன நாள் நல்ல நாள் இல்லை என்று அவர் கருதுகிறாரா?...' என்று ராசாராமிடம் கேட்டார் மில்லர்.

'இல்லையில்லை. அவர் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறார். அதை முடித்துவிட்டு, அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம் என்று அண்ணா நினைக்கிறார்' என்றார் ராசாராம்.

டாக்டர் மில்லர் இதைக் கேட்டதும் வியப்பால் புருவங்களை உயர்த்திப் பார்த்தார். ஆம், அண்ணா புத்தகங்கள் மீது அந்த அளவுக்குப் பற்றுதல் வைத்திருந்தார்.








# - 87 -

அண்ணா முதல்வராக இருந்த சமயம். ஆதித்தனார் அவைத் தலைவர். அன்று அவர் அவைக்கு வராததால் மாற்றுத் தலைவராக இருந்த ஆசைத்தம்பி சபையை நடத்திக் கொண்டிருந்தார்.

ம.பொ.சி.க்குக் கொடுக்கப்பட்ட பத்து மணித்துளிகள் தாண்டியும் மிக இன்றியமையாத செய்தி பற்றி பேசியதால் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். கொடுத்த நேரம் முடிந்துவிட்டதை அறிவிக்க ம.பொ.சி. உடனே பேச்சை முடித்துக் கொண்டார். மணி அடித்ததைக் கவனிக்காத அண்ணா,

‘சிறப்பாகப் பேசிக் கொண்டிருந்த ம.பொ.சி. ஏன் நிறுத்தி விட்டார்’ என்று அருகிலிருந்தவர்களிடம் அண்ணா கேட்டார். ‘மாற்றுத் தலைவர் ஆசைத்தம்பி மணி அடித்துவிட்டார்’ என்றார்கள்.

சபை நடவடிக்கைகள் முடிந்த பிறகு ஆசைத்தம்பியை அழைத்து, ம.பொ.சி.யிடம் மன்னிப்புக் கேட்கச் செய்தார் அறிஞர் அண்ணா.



padippakam



## - 44 -

பெரும்பாலானவர்கள் தாங்கள் கலந்து கொள்ளும் சிறப்பு நிகழ்ச்சியில் பேசுவதற்கு ஒருவாரம் முன் என்ன தலைப்பில் பேச வேண்டும் என்று சொல்லி விட வேண்டும். அப்போது தான் அவர்கள் அந்த தலைப்பில் பேச குறிப்புகளைத் தயார் செய்துகொண்டு வந்து பேசி கைத்தட்டல் பெறுவார்கள்.

ஆனால் பேரறிஞர் அண்ணாவோ அவர் மேடை ஏறி மைக் முன் நிற்கும்போது எந்தத் தலைப்பு கொடுத்தாலும் போதும், அந்தத் தலைப்பில் பேசி அசத்தி விடுவார்.

ஒருசமயம் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் அண்ணாவைப் பேச அழைத்திருந்தார்கள். பேசும் முன் அண்ணா, 'எனக்கு என்ன தலைப்பு தந்துள்ளீர்கள்?' என்று கேட்டார். 'தலைப்பு இல்லை' என்றார் மாணவச் செயலாளர். உடனே அண்ணா 'தலைப்பில்லை' என்ற தலைப்பில் பேச ஆரம்பித்தார்.

'ஒரு நாடு தலைமை பெற வேண்டுமானால் அது சிற்றுரிமை மட்டும் பெற்றால் போதாது; முற்றுரிமை பெற்றாக வேண்டும். நாடு என்ற தலைப்புக்கே முழு அதிகாரம் அந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும் என்பதுதான் அரசியல் இலக்கணம்.

தமிழ்நாடு முழு அதிகாரம் பெறவில்லை. எனவே தமிழ்நாட்டுக்குத் தலைப்பு இல்லை.

இந்திய நாட்டுக்குத் தலைப்பு இந்தியா என்று இருக்கிறது. இந்தி மொழித் தலைப்பு இருக்கிறது. பிறமொழியாளர்களுக்குத் தலைப்பு இருக்கிறது. தமிழ்நாட்டுக்குத் தலைப்பு இல்லை. தமிழ்க் குலத்துக்குத் தலைப்பு இல்லை. தமிழனுக்குத் தலைப்பு இல்லை'.

இப்படி ஒருமணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார் அறிவுக் கடல் அண்ணா.



படிப்பகம்



அண்ணா 100

# - 89 -

**கா**ரைக்குடி இராம. சுப்பையா (பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின் தந்தை) ஒருமுறை சிவகங்கையில் ஒரு கூட்டம் போட்டார். அண்ணாவைப் பேச அழைத்தார். அண்ணாவும் பேச வந்து விட்டார்.

அண்ணா பேசுகிறார்... கூட்டத்தில் சலசலப்பு. எதிரிகள் பாம்பைப் பிடித்து கூட்டத்தில் விட்டுவிட்டனர்.

பாம்பைக் கண்டு படையே நடுங்கும்போது கூட்டம் எழுந்து கலைய ஆரம்பித்தது.

கூட்டம் கலைந்து மக்கள் ஓட முற்படுவதைப் பார்த்த அண்ணா சொன்னார்:

'தமிழன் ஒரு காலத்தில் வீரனாக இருந்தான். இப்போது அந்த வீரம் அருகிப் போய்விட்டது.

பாம்பைக் கையில் பிடித்தான் என்றால் அது தண்ணீர்ப் பாம்பாகத்தான் இருக்கும். நல்ல பாம்பைப் பிடிக்கும் வீரம் இப்போது எந்தத் தமிழனுக்குமில்லை. எனவே நண்பர்களே தண்ணீர்ப் பாம்பைக் கண்டு யாரும் அஞ்ச வேண்டாம்' என்றார்.

பாம்பைக் கண்டு பரபரப்படைந்த கூட்டம், அண்ணாவின் பேச்சைக் கேட்டு அச்சத்தை ஒழித்து அமைதியாக உட்கார்ந்தது.



padippakam



## - 90 -

**1938-ம்** ஆண்டு செப்டம்பர் 26-ம் நாள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் படைத்தளபதியாக மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு, நான்குமாத வெறுங்காவல் தண்டனை ஏற்று சிறைபுகுந்தார் அண்ணா.

1948 இந்தித் திணிப்பைக் கண்டித்துப் போராடி சிறைக் கோட்டம் சென்றார்.

1949 'ஆரிய மாயை' ஆராய்ச்சி நூல் எழுதியதற்காக, ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு நான்கு மாத சிறை தண்டனை பெற்றார்.

1953 ஜூலை 13-ல் மும்முனைப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு செப்டம்பர் முதல் மூன்று மாத வெறுங்காவல் தண்டனை பெற்றார்.

1958 மே-31-ம் நாள் நேருவுக்கு கறுப்புக்கொடி காட்டுவதையொட்டி நடைபெறவிருந்த கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றபோது கைது செய்யப்பட்டார்.

1962 ஆகஸ்ட் 16-ம் நாள் வேலூரில் விலைவாசி உயர்வு கண்டனப் போராட்டத்திற்குத் தலைமையேற்றதால் பத்து வாரக் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

1966 ஜனவரி 26-ம் நாள் இந்தித் திணிக்கப்படுவதைக் கண்டித்து அந்த நாளை துக்க நாளாகக் கொண்டாடியதால் கைது செய்யப்பட்டார்.

இப்படிச் சிறை சென்று தமிழ்நாடு சிறக்க உழைத்த உத்தமர் அண்ணா.



படிப்பகம்





## - 91 -

**1948-ம்** ஆண்டு தந்தை பெரியாரின் தளபதியாக இருந்தவர் அண்ணா. எனினும் திராவிடர் கழகத்தில் இருந்த முக்கியச் சொற்பொழிவாளர் பட்டுக்கோட்டை அழகிரிக்கு அண்ணா மேல் எப்போதும் கசப்பு. அண்ணா அழகிரியை பாசமுடன் அண்ணன் என்றுதான் அழைப்பார்.

காசநோயால் பாதிக்கப்பட்டு தாம்பரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார் அழகிரி. ஆதரவற்ற நிலை. அரவணைப்பார் யாருமில்லை. இந்நிலையில் அழகிரிக்கு உதவத் துடிக்கிறார் அண்ணா; மறுக்கிறார் பெரியார்.

துணிந்து முடிவெடுத்து முன்னொருமுறை தன்னுடைய 'சந்திரோதயம்' நாடக வசூலின் மிகுதியை மதியழகன் மூலம் கொடுத்தனுப்புகிறார். அதைப் பெற்றுக்கொண்ட அழகிரி திரு.மதியழகனிடம் இதுவரை யாரை நம்பினேனோ, அவர் என்னை கைவிட்டார். யாரை ஆவேசமாக எதிர்த்தேனோ, 'ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்தேனோ அவர் எனக்கு உதவுகிறார். மதியழகா, அண்ணாவுக்கு என் நன்றியைச் சொல்லப்பா' என்கிறார் அழகிரி.

அழகிரிக்கு தாம் செய்த உதவி இத்தோடு முடிந்துவிடக் கூடாதென நினைத்த அண்ணா, தம்மை கூட்டங்களுக்கு அழைக்கும் கழகத் தோழர்களுக்கு அழகிரி பெயருக்கு ரூ.100 பணவிடை அனுப்பிவிட்டு, அதற்குரிய சான்றைக் காட்டினால் கூட்டத்திற்கு தேதி கொடுப்பேன் என அறிவித்தார். நிதியும் குவிந்தது.

padippakam





## 92

# கவுன்சிலர் போட்டியில்

ஜஸ்டிஸ் கட்சிப் பேச்சாளராக அண்ணா இருந்தபோதுதான் அவர் சென்னை மாநகராட்சி கவுன்சிலர் பதவிக்குப் போட்டியிட்டார். அவரை எதிர்த்து நின்றவர் காங்கிரஸ்காரர். ஒரு காலத்தில் மாநகராட்சியையும், தமிழக அரசையும் பிடிக்கத்தக்க முறையில் கட்சியை வளர்த்த அண்ணா, அன்றைய தினம் ஒரு சாதாரண கவுன்சிலர் பதவிக்கு நின்று தோற்றார்.

தேர்தலில் அவர் தோற்றார் என்றாலும் தேர்தல் பணிகளிலேயே புதிய முறைகளையும், நாகரிகமான வழிகளையும் புகுத்தினார்.



படிப்பகம்

padippakam





## 93

# தமிழின் மாலுமி

திரு.வி.க. ஒரு கூட்டத்தில் பேசினார்: 'அண்ணாதுரை அவர்கள் காங்கிரஸ் கெட்டுவிட்டதாகக் கூறுகிறார். ஊருக்கு நடுவே எழில்மிக்க நந்தவனம் இருக்கிறது. அதில் புகுந்த நாய் ஒன்று செத்து விட்டது. நந்தவனத்தில் ஒரு நாய் செத்து விட்டது என்பதற்காக நந்தவனத்தையே அழிப்பதா? அதுபோல் காங்கிரசில் சில கேடுபாடுகள் இருக்கலாம். அதற்காகக் காங்கிரசையே அழிப்பதா?' என்று கேட்டார்.

அடுத்த நாள் கூட்டத்தில் பேசிய அண்ணா,

'தமிழ்த் தென்றல் அவர்கள் இலக்கியத்தில் மிகப் பெரியவர்கள். ஆனால், அவர் கூட ஒரு தவறு செய்து விட்டார். காங்கிரசைப் பற்றிச் சொன்ன உவமை சரியில்லை. நந்தவனத்தில் நாய் நுழைந்தது, இறந்தது என்றார். நல்ல நிலையிலுள்ள நாய் நல்ல நிலையிலுள்ள நந்தவனத்தில் நுழைந்தால் வெளியே வந்திருக்கும். வெளியேற முடியாதபடி நந்தவனம் இருந்தது. அவ்வளவு கொடிய நச்சுப் பூக்கள் அங்கே இருக்கின்றன. நாய்க்கே இந்தக் கதி என்றால், மனிதர் நுழைய முடியுமா? ஆகவே, அந்த நச்சுப் பூக்கள் உடைய நந்தவனத்தை அழித்து நல்ல பூக்கள் மலரும் நந்தவனத்தை நாம் அமைக்க வேண்டும்' என்றார்.

அண்ணாவின் திறமைமிக்க பேச்சைக் கண்டு வியந்தார் தமிழ்த் தென்றல்.

'எதிர்க்கட்சியிலிருந்தாலும் இவனே தமிழின் மாலுமி' என்று அவரது தமிழ் உள்ளம் ஆடியது.



படிப்பகம்



94

# வெள்ளையரை எதிர்த்த தீர்க்கதரிசி

ஜஸ்டிஸ் கட்சியும் அதன் தலைவர்களும் வெள்ளையர்கள்பால் அளவுக்கு மீறிய நம்பிக்கை கொண்டிருந்தாலும் அண்ணா அவர்கள் அவ்வப்போது வெள்ளையருக்கு எதிரான உணர்வைக் காட்டிக் கொண்டுதான் வந்தார்.

சென்னை ராஜதானி கவர்னராக எர்ஸ்கின் பிரபு என்பவர் பதவியேற்றார். அவர் திறமைக் குறைவு உடையவர் என்று அறிந்த அண்ணா அவர்கள், கவர்னரின் திறமைக் குறைவைப் பற்றிப் பத்திரிகையில் எழுதி விட்டார். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் மிரண்டு போனார்கள். அந்தக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பன்னீர்செல்வம் ஓடோடி வந்தார்.



'அண்ணாதுரை, அண்ணாதுரை, என்ன காரியம் செய்தீர்கள்? 'எர்ஸ்கின் பிரபு பற்றித் திறமைக் குறைவானவர் என்று எழுதிவிட்டீர்களே?'

'உண்மையைத்தானே எழுதினேன்!'

'என்ன உண்மை? அவர் பதவியேற்பதற்கு முன்பே எப்படி அவர் திறமை தெரியும்? எதையும் யோசித்து கட்சி நலனையும் பார்த்து எழுத வேண்டும்,

'யோசித்துதான் எழுதினேன். கட்சி நலனைவிட நாட்டு நலன் பெரிது என்பதுதான் 'ஐயா'வின் கொள்கை'.

சரி, இவருடன் பேசி ஜெயிக்க முடியாது என்று கண்ட பன்னீர்செல்வம், பெரியாரைப் பார்த்து முறையிட்டார்.

'அண்ணாதுரை எழுதுறாருன்னா... அதிலே விஷயம் இருக்குமுங்க' என்று ஒரேயடியாக அண்ணா பக்கம் சாய்ந்து விட்டார் பெரியார். மனவருத்தத்துடன் திரும்பிய பன்னீர்செல்வம் ஒரு சில மாதங்கள் கழித்துத் திரும்பி வந்தார். வந்ததும் வராததுமாக அண்ணாவின் கைகளைப் பிடித்துக் குலுக்கினார்.

'அண்ணாதுரை... நீங்கள் சொன்னது சரிதான். எர்ஸ்கின் நிர்வாகத் திறமையற்றவர் என்று இப்போதுதான் கண்டு கொண்டோம். நீங்களோ... பல மாதங்களுக்கு முன் கூறிவிட்டீர்கள். உள்ளபடியே... நீங்கள் தீர்க்கதரிசி' என்று மனம் நெகிழப் பாராட்டினார் பன்னீர்செல்வம்.

padippakam





## 95

# கடவுளும் குடும்பக் கட்டுப்பாடும்

அறிஞர் அண்ணா தமிழக முதலமைச்சராக இருந்தபோது, நடந்த குடும்பக் கட்டுப்பாடு விழாவில் பேசினார். அப்போது அவர் சொன்ன உவமைகள் பெரும் கைதட்டல் பெற்றன.

ஆண்டவனே கூட குடும்பக் கட்டுப்பாட்டில் செம்மையாக நடந்து கொண்டிருக்கிறார். நம்முடைய பெரிய கடவுள் என்று சொல்லப்படுகிற சிவபெருமானே கூட இரண்டே பிள்ளைகள்தான் பெற்றார். பிள்ளையார் பிள்ளைகளைப் பெறவில்லை. முருகன் பிள்ளைகளைப் பெற்றதாகப் புராணம் கிடையாது.

படிப்பகம்

padippakam



எனவே, கடவுள்கள் கூடக் குடும்பக் கட்டுப்பாட்டை ஒழுங்காக நிறைவேற்றியிருக்கும்போது நாம் மனிதர்கள் அதை நிறைவேற்றக் கூடாது. நிறைவேற்றுவது பாவம் என்று கருதுவது தவறான கருத்தாகும். குடும்பக் கட்டுப்பாட்டை நிறைவேற்றாத கடவுள்கள் எல்லாம் என்ன பாடுபட்டார்கள் என்பதைப் புராணமே சொல்கிறது.

21 குழந்தைகளுக்குத் தந்தையான குசேலன் என்ன ஆனான்? அவன் கடைசியாக கிருஷ்ணபரமாத்மாவைத் தேடிச் சென்று குபேரன் ஆனான் என்று புராணம் படிக்கிறோம். நான் கேட்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் உருவாகிற குசேலர்களுக்கு எல்லாம் ஒரு கிருஷ்ண பரமாத்மா கிடைப்பாரா? அவலை வாங்கிச் சாப்பிட்டு அரண்மனைகளையும் மாளிகைகளும் கட்டித்தர.

அதைப் போலவே நாரத முனிவர் பெண் உருவம் எடுத்து அறுபது குழந்தைகளைப் பெற்றார். பெற்ற காரணத்தினாலே தான் தம்புரா தூக்கிக் கொண்டு ஊரெல்லாம் அலைந்து கொண்டிருக்கிறார் என்று புராணத்தில் படிக்கிறோமே அல்லாமல், அறுபது குழந்தைகளோடு அவர் ஒழுங்காக வாழ்ந்தார் என்று நாம் படிக்கவில்லை. எனவே, புராணத்திலேயே நமக்கு நல்ல எடுத்துக்காட்டு இருக்கிறது.

அதிகக் குழந்தைகளைப் பெற்றவர்கள் ஆலாய்ப் பறந்தார்கள். இரண்டே பெற்ற பரமசிவன் கைலயங்கிரியில் மிக உன்னதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஆகவே நம்முடைய கடவுளைப் பின்பற்றியாவது நீங்கள் இந்தக் குடும்ப நலத் திட்டத்தில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்று இந்து மதத்திலே உள்ளவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.



படிப்பகம்

padippakam





## 96

# மூடப்பழக்கம் ஒருநாளில் ஒழியுமா?

'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகக் காட்சிகளை காஞ்சியிலிருந்து அண்ணா இரவில் எழுதிக் குவித்தார். அதைப் பிரதி எடுக்க இலட்சுமணன் என்ற இளைஞரை கே.ஆர்.ராமசாமி அனுப்பி வைத்தார்.

ஒருநாள் பகல் உணவு நேரம். மணி ஒன்றாகிவிட்டது. உணவு உண்ண அண்ணாவையும், தன்னையும் யாரும் அழைக்காததைக் கண்ட இலட்சுமணன் பசியில் தவித்தார். 'இப்படி ஒரு நாளும் நடந்ததில்லையே' என்ற நினைப்போடு அண்ணா முகத்தைப் பார்த்தார். இலட்சுமணனின் தவிப்பைப் புரிந்துகொண்ட அண்ணா தமது சின்னம்மாவிடம் தாமதத்திற்கான காரணம் கேட்டார்.

அண்ணா 100

படிப்பகம்

padippakam





'இன்று அமாவாசை. விரத நாள். காக்காய்க்குச் சோறு போட்டு விட்டுத்தான் மற்றவர்கள் சாப்பிட வேண்டும். உலையில் அரிசி கொதித்துக் கொண்டிருக்கிறது' என்றார் சின்னம்மா.

அந்தச் செய்தியை அருகிலிருந்த இலட்சுமணனிடம் தெரிவித்து 'நாம் கூடக் காக்கையாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று இப்பொழுது எனக்குத் தோன்றுகிறது' என்று சொல்லிச் சிரித்தார் அண்ணா.

உணவு முடிந்ததும் இலட்சுமணன் சிறிது தைரியத்துடன், 'அண்ணா, நான் ஒன்று உங்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். கேட்கலாமா?' என்றார். அவர் என்ன கேட்க எண்ணுகிறார் என்பதைப் புரிந்துகொண்ட அண்ணா...

'தம்பி, இந்தக் காக்காய்ச் சோறு சம்பிரதாயத்தைப் பற்றித்தானே கேட்கிறாய்? உனது வியப்பு எனக்குப் புரிகிறது. இதுபோல படிந்து கிடக்கும் மூடப்பழக்கங்கள் என் இல்லத்தில் மட்டுமல்ல. தென்னாட்டில் பல்லாயிரக்கணக்கான இல்லங்களில் புரையோடிக் கிடக்கின்றன. அவற்றைத் திடீரென்று கிள்ளியெறிந்துவிட முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான். மக்கள் மனதை மாற்றி, இதுபோன்ற சம்பிரதாயச் சடங்குகளில் இருந்து விடுபட வழி செய்ய வேண்டும்?

இந்த இல்லத்தில் மட்டும் அந்தப் பழக்கம் அகற்றப்பட்டால் போதுமா? ஆயிரம் ஆயிரம் இல்லங்களில் நாளடைவில் மூடப்பழக்கங்கள் கைவிடப்படும்போது, இந்த இல்லத்திலும் அது தானாகவே ஒழிந்து விடும்' என்று விளக்கினாராம் அண்ணா.



படிப்பகம்

padippakam



## 97

# அண்ணாவுக்கு மேக்கப் போட்ட எஸ்.எஸ்.ஆர்.

ஒருசமயம் ஈரோட்டில் டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகம் நடந்து கொண்டிருந்தது. அந்த நாடகக் குழுவில் எஸ்.எஸ்.ராஜேந்திரனும் ஒரு நடிகராக இருந்தார்.

அதே அரங்கில், அண்ணா நடிக்கும் நாடகம் ஒன்று அன்று நடக்க இருந்தது. நாடகம் தொடங்கும் முன் நடிகர்கள் மேக்கப் போட்டுக்கொள்ள முற்பட்டனர். அப்போது மேக்கப் ரூமில் கண்ணாடி முன் உட்கார்ந்திருந்த ஒருவரைக் காட்டி, 'இவருக்கு மேக்கப் போடு' என்று ராஜேந்திரனிடம் சொல்லப்பட்டது.

அண்ணா 100



படிப்பகம்

padippakam



ராஜேந்திரன் அரைகுறை மனதுடன் அந்த ஆளுக்கு மேக்கப் போட்டார். 'இது என்ன, முகத்தை இப்படி வைத்துக் கொண்டால் எப்படி மேக்கப் போடுவது? இப்படித் திரும்பு, மேலே பார், அப்படித் திரும்பு' என்று அதட்டினார் எஸ்.எஸ்.ஆர். அவரும் எதுவும் பேசாமல் ராஜேந்திரன் சொன்னபடியெல்லாம் செய்தார்.

'இன்று என்ன விசேஷம்? ஏன் இத்தனை அவசரப்படுகிறாய்?' என்று கேட்டார் மேக்கப் போட்டுக் கொண்டவர்.

அண்ணா நடிக்கப் போகிறார். முதலிலிருந்து அவர் நடிப்பைப் பார்க்கலாம் என்று துடித்துக் கொண்டிருந்தேன். உங்களுக்கு மேக்கப் போடுவதற்குள் விடிந்துவிடும் போலத் தெரிகிறதே. இனி நானாவது நாடகம் பார்ப்பதாவது... நாடகம் ஆரம்பித்திருப்பார்கள்' என்றார் சலிப்போடு ராஜேந்திரன்.

'கவலைப்படாதே! அண்ணா இன்னும் மேடைக்கே போகவில்லை' என்றார் மேக்கப் போட்டுக் கொண்டிருந்தவர்.

'உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்றார் ராஜேந்திரன்.

'அவர்தான் உன்னிடம் மாட்டிக்கொண்டு ஒருமணி நேரமாக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாரே. எப்படி மேடைக்குப் போகமுடியும்?' என்றார் அண்ணா.

எஸ்.எஸ்.ஆர். சந்தோஷம் பொங்க அண்ணாவைப் பார்த்து கைகூப்பினார். அண்ணா புன்னகைத்தார்.



படிப்பகம்

padippakam



# 98

# எது பொற்காலம்?

அறிஞர் அண்ணா நகைச்சுவையாகப் பேசினாலும் அதிலும் பகுத்தறிவு தெறிக்கும். 'அந்தக் காலம் மாதிரி வருமா- அது ஒரு பொற்காலம்' என்று காலத்தின் மீது பழிபோட்டு பேசுபவர்களுக்கு அண்ணா 'எது பொற்காலம்' என்பதை நகைச்சுவையாகச் சொன்னார்.

'ராமன் காலத்திலேயும், நளன் காலத்திலேயும், அரிச்சந்திரன் காலத்திலேயும் தண்டவாளம் இல்லை. ரயில் ஓடவில்லை. ஆனால் உலுத்தர்கள் என்று கூறப்படுகிற நம்முடைய நாசகார காலத்தில் தான் ரயில் ஓடுகிறது'.

இந்த உத்தமர்கள் அவதார புருஷர்கள் காலத்திலே, சீதை காணாமல் போன உடனே ராமன், 'ஏ மரமே, கொடியே மலரே, வண்டே, பறவையே, புள்ளினமே, முகிலே, முகிலுறும் வானே, நிலவே என் 'சீதையைக் கண்டீரோ?' என்றுதான் ராமன் கேட்டானே தவிர, டெலிபோனை எடுத்து அயோத்தியை அழைத்து 'சீதை வந்தாளா?' என்று கேட்டு 'இல்லை' என்று அறிந்ததும் ஜனகருக்குத் தந்தி கொடுத்துக் கேட்டு 'இல்லை' என்று அறிந்ததும் டிரங்காலில், 'என் சீதையைக் கண்டீரோ' என்று இராவணனைக் கேட்டானா?" என்று கேட்டார்.

ஆன்மீகம் தழைத்தோங்கிய அந்தக் காலத்தை, அவதாரப் புருஷர்கள் வாழ்ந்த அக்காலத்தை விட விஞ்ஞானம், பகுத்தறிவு, மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள தற்காலம் பயனுள்ள பொற்காலம் என்பதை விளக்கிக் காட்ட நகைச்சுவையாக அண்ணா அன்று பேசியது இவை என்கிறார் அறிஞர் முல்லை பி.எல்.முத்தையா.

அண்ணா 100



படிப்பகம்

padippakam



# 99

## ஆராய்ச்சி நிபுணர்

**த**மிழ்நாடும், தமிழர் சமுதாயமும் அண்ணா ஆட்சியில் எவ்வளவோ அதிசயமான முன்னேற்றமடைய காத்திருந்தது. அவரும் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி, அதை உருவாக்குவதே தனது கடமை என்று கருதி இருந்தார். அதற்கு எடுத்துக்காட்டாக,

'நான் இந்த (என்னுடைய) மந்திரிசபையையே பெரியாருக்குக் காணிக்கையாக வைத்து விட்டேன்' என்று கூறி இருக்கிறார். அப்படியென்றால் பெரியார் கொள்கைப்படி நான் நடப்பேன் என்று சொன்னதாக நான் கருதினேன்.

அதற்கேற்ப அவர் செய்த அரும்பெரும் காரியங்களில் முக்கியமானது. 'சுயமரியாதைத் திருமணம் செல்லுபடி சட்ட'மாகும். அதில் கடவுளுக்கோ, மதத்திற்கோ, சாஸ்திரத்திற்கோ இடமில்லை என்பதாகும். இது தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்லாமல் உலகத்திற்கே மாபெரும் துணிச்சலான காரியம் என்று கருதப்பட்டது.

மற்றும் 'இந்தி மொழி தமிழ்நாட்டுக்குக் கட்டாயம் என்பது ஒப்புக்கொள்ள முடியாது' என்று சட்டசபை மூலமே தீர்மானம் செய்ததானது தனது பதவியே போனாலும் சரியென்ற துணிவு கொண்ட காரியமாகும். இவை தவிர உத்தியோகங்களில், பதவிகளில் தமிழர்களின் உரிமையைப் பாதுகாத்ததாகும்.

இதில் உள்ள குறிப்பிடத்தக்க அதிசயம் என்னவென்றால் இவை செய்யப்பட்ட பிறகும் நாட்டில் எல்லா கட்சியாருடனும் மிக்க நேசமாகவும், அன்புக்குரியவராகவும் இருந்து வந்ததாகும்.

அண்ணாவின் குணம் மிக மிக தாட்சண்ய சுபாவமுடையது என்றுதான் சொல்ல வேண்டும். யாரையும் கடிந்து பேசமாட்டார். தன்னால் முடியாத காரியமாய் இருந்தாலும் முடியாது என்று சொல்ல



படிப்பகம்

padippakam



மிகவும் தயங்குவார். நல்ல ஆராய்ச்சி நிபுணர் என்றுதான் சொல்ல வேண்டும்.

தேர்தலில் வெற்றி பெறும் வரை அக்கழகத்திற்கு நான் படு எதிரியாக இருந்தவன். தேர்தலுக்குப் பிறகு அண்ணா என் எதிர்ப்பை அடியோடு மறந்து மிக்கப் பெருந்தன்மையோடு நட்பு கொள்ள ஆசைப்பட்டு என்னை அவர் பிரிவதற்கு முன் இருந்த மரியாதையுடன் நண்பராகவே நடத்தினார். அதன் பயனாக எனக்கும் மக்களிடையே அதிக மதிப்பு ஏற்பட்டதுடன் என் அந்தஸ்தும் அதிகமாயிற்று என்று கூட சொல்லலாம். அதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்க வேண்டியது என் கடமையாகி விட்டது.

இப்படிப்பட்ட ஒரு அற்புத குணம் படைத்த அண்ணாவின் முடிவானது, தமிழருக்கும், தமிழ்நாட்டிற்கும் பரிகாரம் செய்ய முடியாத நட்டமேயாகும்.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் ஏற்பட்ட அண்ணாவின் இந்த முடிவு இந்த நாட்டில் மற்ற எவருக்கும் எளிதில் கிடைக்க முடியாத உயர்தர முடிவேயாகும்".

*-3-2-69 'விடுதலை'யில் தந்தை பெரியார்.*





படிப்பகம்

padippakam





# 100

# அண்ணா வாழ்கிறார்

"**வா**ழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்... மாபெரும் வீரர், மானங்காத்தோர் சரித்திரம் தன்னிலே நிற்கின்றார்' என்றார் கவியரசு கண்ணதாசன்.

தமிழகத்தில் வாழ்ந்து மறைந்தவர்களில், மறைந்தாலும் மக்கள் மனதில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதில் பேரறிஞர் அண்ணா இருந்தபோது சாதனை செய்தது மட்டுமல்ல; இறந்து இறுதி ஊர்வலத்திலேயும் உலக சாதனை படைத்தவர் என்கிறது 'கின்னஸ்' சாதனைப் புத்தகம்.

1984-ம் ஆண்டு வெளிவந்துள்ள 'கின்னஸ்' புத்தகத்தில் அண்ணா அவர்களின் இறுதி ஊர்வலம் குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறது:

"சென்னை மாநில முதலமைச்சர் திரு.சி.என்.அண்ணாதுரை 1969-ம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் மறைந்தார். அவரது இறுதிச் சடங்கு ஊர்வலத்தில் ஒன்றரைக் கோடி மக்கள் (15 மில்லியன்) கலந்து கொண்டனர் என்று செய்திகள் கூறுகின்றன".

இதற்கு முந்தைய சாதனையாக 'கின்னஸ்' குறிப்பிட்டிருக்கும் இரண்டு தகவல்கள்:

"1806-ம் ஆண்டு ஜனவரி 9-ம் நாள் பிரிட்டனின் துணைத் தளபதி வைக்கவுண்ட் நெல்சன் இறுதிச் சடங்கு ஊர்வலமே மிக நீளமானதாகவும் அந்த ஊர்வலத்தைக் காண அனுமதிச் சீட்டு வாங்கி, தூய பவுன் சர்ச்சில் காலை 8.30 மணிக்கு வந்த மக்கள் இரவு 9 மணிக்குத்தான் அந்த இடத்தைவிட்டுச் சென்றதாகக் கூறுகிறது".

இன்னொரு நிகழ்ச்சி: "எகிப்து நாட்டின் குடியரசுத் தலைவர் கமால் அப்துல் நாசர் 1970-ம்



படிப்பகம்

padippakam





ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி மறைந்தார். தலைநகர் கெய்ரோவில் நடந்த இறுதிச் சடங்கு ஊர்வலத்தில் 40 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்" என்கிறது.

அண்ணா இருந்து மக்களுக்கு நல்லது செய்தார்; அவர் இறந்தும் நல்லது செய்ய காரணியாக வாழ்ந்து வருகிறார்- கலைஞரின் இதயமாக.



படிப்பகம்

padippakam





# குறிப்புகளுக்காக....



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



எழுத்தாளராகும் கனவுகளோடு ஐந்து ரூபாயுடன் 1982-ல் சென்னைக்கு வந்தவன் நான். அதன்பின் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்போல பல வேலைகள் பார்த்துவிட்டு பத்திரிகையாளன் ஆனேன்.
கடந்த 1989-ல் தொடங்கியது எனது எழுத்துப்பணி.
'மின்மினி'யில் ஓராண்டு. 'வண்ணத்திரை'யில் நான்காண்டு. 'குமுதம்' (ஒப்பந்த அடிப்படையில்) நான்காண்டு, 'குங்குமம்', 'முத்தாரம்', 'பேசும்படம்', 'குங்குமச்சிமிழ்', 'சினிக்கூத்து', 'கல்கி', 'திரைச் சிற்பி', 'ரஜினி' என பல முன்னணி பத்திரிகைகளில் சுதந்திரமான பத்திரிகையாளனாக எழுத்து பயணம் தொடர்ந்தது.
கடந்த பிப்ரவரி 2006 முதல் 'டி-சினிமா'வின் பொறுப்பாசிரியர் பணி.
இத்தனை வருட சினிமா பத்திரிகை அனுபவத்தில் நான் பார்த்த பேசிய, பழகிய கேள்விப்பட்ட விஷயங்கள் புத்தகமாக இறக்கி வைக்க ஒரு வாய்ப்புக்காக காத்திருந்தேன்.
அந்த வாய்ப்பு இன்று நிறைவேறியது!

-சபீதாஜோசப்

4/90

படிப்பகம்